# சிரித்திரன்




CHIRITHIRAN

A CARTOON MAGAZINE

நகைச்சுவை ஏடு

ஆவணி 1970

விலை: சதம் -/45.

செய்யது பீடி



# செய்யது பீடி டிப்போ

192, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.

தொலைபேசி: 32301

பெரியகடை
யாழ்ப்பாணம்





''ரஜா [ராஜமகா ரஜ] வீரப்பிரதாபன் வந்தானே வந்தானே'



''தஞ்சையில் பறந்த புலிக் கொடியை—உன் பெண்மையில் கண்டேனே''



''உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல''



''உலகத்தில் திருடர்கள் சரிபாதி''

மைனர் மச்சான்

மாயன்





வளர்க்கும் மீன்களுக்கு

## பிஷ்மெக்ஸ்

மீன் உணவையே
கொடுங்கள்




பிஷ்மெக்ஸ்
இப்பொழுது இலங்கையில்
எல்லாக் கடைகளிலும்
விற்பனையாகிறது.
“ பிஷ்மெக்ஸ் ”
பிறவுண்சனின்
ஒரு தயாரிப்பு!


இம்மாதப் பன்ளிப் பகிடிப்
பரிசு பெறுபவர்.

செல்வி. எம். இந்திரா
கொழும்பு-12,

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனை.
கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பில்லை. —ஆசிரியர்.



# உள்ளும் புறமும்

கோயிலுக்குச் செல்லுவதும்
கும்பிட்டுத் தொழுவதுவும்
நாயினுக்குங் கீழெனவே
நாவாரத் தொழுவதுவும்
சாயிபாபா படத்தினையே
சட்டமிட்டு மாட்டுவதும்
ஆயிரத்து எட்டுமுறை
அர்ச்சனைகள் செய்வதுமேன்?

பேர்விரும்பாப் பெருமகன்செய்
பெருஞ்சிலைக்கு வண்ணமிட்டுச்
சீரழித்துப் பூச்சிட்டு
செய்யாத தெலாம்செய்தும்
தேர்ச்சிவிகை திரைமற்றும்
திருவிளக்குப் போன்றதிலு
ஊரறியாத் தம்பெயரை
'உபய'மெனப் பொறிப்பதுவும்

ஒட்டி உலர்ந்தவனை
ஓடாகத் தேயவைத்து
வட்டி பெருக்கியவன்
வாசல்மனை ஏலர் விட்டு
ஒட்டிப் பிழிந்தபணம்
ஓடாமல் தம்மிரும்புப்
பெட்டியிலே கெட்டிபெற்று
பேசாதிருப்ப தற்கா?

பேசரிய ஞானிபெறும்
பெருமானின் பேரருளைக்
காசுவிலை பேசுதற்குக்
கடவுளுமும் கடைச்சரக்கா?
பேசுமுந்தன் பெயர்நாளில்
பெரிதுசெயு மர்ச்சனைகள்
ஈசனுடன் மேடையிலே
இருப்பதற்கு முன்பணமா?

மாசான உம்பணத்தை
மாற்றிவிட்டு உண்டியலில்
காசாகப் போட்டதெல்லாம்
கைக்கூலி அன்னவர்க்கோ
கூசாமல் நீர்நிறையக்
கோரும் வரந்தரற்குப்
பேசாது உம்வீட்டில்
பிழைக்கின்ற ஏவலரோ?

பள்ளத்தில் தடங்கலின்றிப்
பாய்ந்துசெலும் நீரருவி
வெள்ளமெனச் சென்றடையு
மெய்யன்பர் தங்களது
கள்ளமிலா உள்ளத்தில்
கரந்துறையும் ஈசனவன்
குள்ளர்கள் மனத்தில்
முந்துவரோ அறிவிலிகாள்?

கே. கணேஷ்.

# சுழல் கேடயம்




நண்பர்; உங்களுக்கு குழந்தை பிறந்தநாள் நல்ல நாளாக இருக்கிறது. நீங்கள் என்னமோ நாள் சரியில்லை என்று வருத்தப்படுகிறீர்களே.

வியாபாரி: அன்றுதானே விலைக் கட்டுப்பாடு பண்ணிவிட்டார்கள் எங்கள் சாமானுக்கு.

நண்பர்: ?...?...?...

பா. மனோரமா
கிருண்பாஸ்

மகன்: அப்பா பஸ் ஸ்டான்டுகளில் உள்ள 'போர்டில்' ஏனப்பா பஸ்ஸுக்கு முன்னால் ஆச்சரியக்குறி போட்டிருக்காங்க.


தகப்பன்: அதுவா பஸ் எப்போமே குறித்த இடத்தில் நிற்காது பொது மக்கள் பஸ் ஸ்டான்டுகளில் பஸ் ஏன் நிற்கவில்லை என்று ஆச்சரியப்பட வேண்டாம் என்பதற்காக.

—இரா, சோமசுந்தரம்

மனைவி: அதுசரி எதற்கெடுத்தாலும் பகிஷ்கரிப்பு செய்கிறீர்களே உங்கள் பிறந்த நாள் நாளைக்கு வருகிறதே. என்னசெய்யப் போகிறீர்கள். உங்கள் ஆதரவாளர்கள் என்னைக் கேட்டுவரச் சொன்னார்கள்.

வேட்பாளர்: ?...?...?...

பா. மனோரமா
கிருண்பாஸ்




**கே. அம்மையப்பன், சே. ஆறு முகம்ஹைலன்ஸ்கல்லூ, ஹற்றன்.**

கே: இயற்கையின் நியதி என்ன?

ப: மனிதன் இயற்கை எய்தல்

**செல்வி. சியாமளா வேலுப்பிள்ளை ஏழாலை மேற்கு, சுன்னுகம்.**

கே: தமிழ் சினிமாவால் மக்கள் கெட்டுப்போய் விடுகிருர்கள் என்று மேடை ஏறிப் பேசிவிட்டு இரவில் சினிமாப்பார்க்கும் பெரியோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: மன்னிக்க வேண்டும்...நிரபராதி...மனைவி சினிமா ரசிகையாயிருந்தால் பாவம் என்ன செய்யும்.

**கா, சபாநாயகம், கி. ப. முகாம். விஸ்வமடு, பரந்தன்.**

கே: படித்தவன் கருத்தெல்லாம் சபை ஏறுமா?

ப: படித்தவன் கருத்து சங்கபலகை ஏறினது அந்தகாலம் படித்தவன் கருத்து பழைய பேப்பர் காரன் தராசு ஏறுகிறது இந்தக் காலம்.

**எஸ். ஜெயபாலன், இல. 14, வோட் பிளேஸ், கொழும்பு-7**

கே: தாயின் பாசத்தை எப்போது உணருகிருன்?

ப: கல்லூரி விடுதியில் கல்லு கடிபடும்போது.

**பி. எஸ். ஏ, தாகிர், மே/பா, புகாரி 161, பிரதான வீதி, பருத்தித்துறை.**

கே: பாராளுமன்றம் கூடுவதன் காரணமென்ன?

ப: ஆண்டிகள் மடங் கட்டுவதுபோல் அங்கத்தவர்கள் மடம் கட்டுவதற்கு.

**தே. தாஸன், கலைக்குடில்- சன்னிதி தெரு, அச்சுவேலி.**

கே: கண் வீச்சுக்கும், கல் வீச்சுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: கண்ணடிபட்டால் நோமாருது...கல்லடி பட்டால் மாறும்.

**மு இ. அலீஸ், மதுரசா வீதி, நற்பிட்டி முனை கல்முனை.**

கே; மக்களுக்கு அரசாங்கம் முக்கியமா?

ப: பொது மக்களைப் பாதுகாக்கும் அரசாங்கம் முக்கியம் தம்மக்களைப் பாதுகாக்கும் அரசாங்கம் முக்கியமில்லை.

**தி. சிவானந்தன், சங்கானைமேற்கு, பண்டத்தரிப்பு.**

கே: தேர்தலில் தோல்வி அடைந்தும் தலை குனியாத அபேட்சகரைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: கட்டுக் காசு இழக்க வில்லையே என்ற இறுமாப்புபோலும்

**எம். தமீம், 50, ஜின்னு வீதி, யாழ்ப்பாணம்.**

கே: ஆண்டவன் முதலில் ஆணைப் படைத்தானு அல்லது பெண்ணைப் படைத்தானு?

ப: ஆணை... மணவறையில் முதல் போய் இருப்பவன் ஆண் தானே.

**எஸ். நாகராஜன், பதுளை.**

கே: அண்ணன் தம்பி இருவரும் ஒரே குடும்பத்தில் உள்ள அக்கா, தங்கையை திருமணம் செய்வதைப்பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: சொத்து சுற்றி சுற்றி சுப்பர் கொல்லைக்குள் நிற்கும் தம்பி.

**செல்வி. எம். ஆர். குமாரி, தாரன் கடுவ எஸ்டேட், தலாத்து ஓயா.**

கே: கணவனின் மனம் மகிழ்வுடன் இருக்க ஒரு மனைவி என்ன செய்ய வேண்டும்?

ப: பெற்றேரிடம் சுரண்டிச் சுரண்டி சீதனம் வழங்கியபடி இருக்க வேண்டும்.

**இ. வேலாயுதம், சந்தை கண்டி வீதி, கிளிநொச்சி.**

கே: பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனுக இருக்கும் சினேகிதன் எப்படிப்பட்டவன்?

ப: நன்மையில்லாத நண்பன். பாலும் குடிக்கவிட மாட்டான். பொலிடோலும் குடிக்கவிட மாட்டான்.

**அ. அம்பிகைபாலன், விக்கினேஸ்வர பவனம், கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.**

கே: ஒருவன் தற்கொலை செய்ய முயற்சித்தால் ஏன் அரசாங்கம் கூடிய தண்டனை கொடுக்கிறது ஒருவன் இறந்தால் அரசாங்கத்திற்கு இரண்டு கொத்து அரிசி மிச்சம்தானே?

ப: தேர்தல் காலத்தெய்வத்தை தற்கொலை செய்ய விடலாமா.

**ஆர். எம் பாலகிருஷ்ணன்,**
**74, அளுத்கம ரோட், மத்துகம.**

கே: சிரித்திரன் இருமுறை வருவானா?

ப: வியாபாரிகள் தான் இன்றைய பாரிகள்... அவர்கள் நினைத்தால் வாரம் ஒரு முறையே வரலாம் தம்பி,

**ப. குழந்தை வேலு, ஹைலன்ஸ் கல்லூரி, ஹட்டன்.**

கே: மாடர்ன் ஆர்ட் வரைவதில் உலகத்திலே நிபுணர்யார்?

ப: ஆட்டைப் பார்த்து, மாட்டை வரைபவர்கள் எல்லோரும் நிபுணர்களே;

**கே. பாலச்சந்திரன் வவுனியா.**

கே: கடவுளைப் பேட்டிக் காணப்போகிறேன் நீரும் வருவீரா?

ப: ஏன் தம்பி உம்மை டாக்டர் கைவிட்டு விட்டாரா.

**சாம். வே. ஜேம்ஸ்,**
**அளிங்கவத்தை தோட்டம்,**
**தெனியாய.**

கே: சந்திரன் நிலம் எப்படிப் பட்டது?

ப: மேக்கப் போடாத நடிகையின் முகம் போன்றது.

**க. கணேசன், பூவரசங்குளம்**
**வவுனியா.**

கே: தேர்தலில் தோல்வி யுற்றவர் ஆட்சேப மனுதாக்கல் செய்தவன் நோக்கமென்ன?

ப: வென்றவரின் புகைப்படங்களை பத்திரிகைகளில் காண கண் நோவதால்.

**எஸ். எம். பரீட், மொஹமட்,**
**கண்டக்குடா தலைவில்.**


கே: தமிழ் பேசத் தெரியாத் எம். பி. எப்படி தமிழுக்கு சம அந்தஸ்து எடுத்துக் கொடுக்க முடியும்?

ப: காதலிக்கத் தெரியாதவருக்கு கல்யாணம் செய்து வைக்கவுமா தெரியாது.

**எஸ். சபாநாயகம், வட்டுக்**
**கோட்டை கிழக்கு வட்டுக்கோட்டை**

கே: இன்றைய மனிதன் எதை நினைத்துக் கவலைப்படுகிறான், எதை நினைத்துச் சந்தோஷப்படுகிறான்?

ப; மனைவியின் புன்னகையை நினைத்துச் சந்தோஷப்படுகிறான். மனைவி விரும்பும் பொன்நகையை நினைத்து கவலைப்படுகிறான்.



டியூஷன் மாஸ்டர்: (பெருமையாக)

உங்கள் மகனுக்கு கணித பாடம் விழுந்து விழுந்து சொல்லிக் கொடுத்தேனே பரீட்சைக்கு இரவும் பகலும் பரீட்சையில் எவ்வளவு மார்க்குகள் வாங்கினான்?

அப்பா: இருகோடுகள் தான் வாங்கினான். அதாவது பதினொன்று.

டியூஷன் மாஸ்டர்: ...?...?...?

**ச, ரா. சர்மா**
**கிராண்பாஸ்**




## மாத்திரைக் கதை

# தலைவிதி

பரந்த புல்வெளியில் வெய்யில் கொடுமை தாங்க முடியாமல் மான் ஒன்று வேகமாக எங்கோ ஓடிக்கொண்டிருந்தது. மேலே வானத்தில் பறந்து வந்த ஒரு காக்கை மானைப்பார்த்து, ''தோழா, உன்னைப்பார்க்க மிகவும் பரிதாபமாக இருக்கிறது. வெய்யில் கொடுமை தாங்காமல் மரநிழல் தேடித்தானே ஓடுகின்ருய்?'' என்று வேதனையோடு கேட்டது.

மான் ஒரு நிமிடம் ஓட்டத்தைத் தணித்து, வெய்யிலின் நடுவே நின்று தனக்காக இரங்கிய காகத்தை நிமிர்ந்து பாசத்தோடு பார்த்தது.

பிறகு அது ''நண்பா, வெய்யிலின் கொடுமை எனது வாழ்வில் ஏற்பட்ட துரதிர்ஷ்டத்தை விட ஒரு பெரிய கொடுமையா? இதோபார் என் தலையிலேயே ஒரு மரம் இருக்கிறது-இதனுல் என்ன புண்ணியம்? நிழல்தான் இல்லையே.........'' என்று கொம்பைப் பரிதாபமாக ஆட்டிக் காட்டியது.

'ஆமாம் நீ ஒரு துரதிர்ஷ்டசாலிதான்' என்று இரங்கியது காக்கை.

மானின் கண்களில் நீர்த்துளிகள் தேங்கி நின்றன. செவிகளை வேதனையோடு ஆட்டி கால்களால் மண்ணை ஒரு முறை கிளறி எறிந்துவிட்டு, மான் மறுபடியும் ஓட ஆரம்பித்தது. ஓடிக்கொண்டே காக்கையை அண்ணுந்து பார்த்து, மான் திரும்பவும் கூறியது:-

''தலையிலே மரத்தை வைத்தவன் இலையிலே நாலை வைத்தாணு?''

—காசி ஆனந்தன்

**ச. தா. குகதாஸ், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.**

கே: வீடு வீடாகச் சென்று தபால் கொடுக்கும் தபாற் காரர்களுக்கும் வீடு வீடாகச் சென்று வோட் கேட்கும் அபேட்சகருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தபாற்காரன் தினமும் வீடு வருவான்... அபேட்சகர் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை வீடு வருவார்.

**ஆர். பி. இராஜரட்னம், தேவால கந்தை எஸ்டேட், தெனியோவிற்ற**

கே: நம்பிக்கை தான்தான் வாழ்வின் அடிப்படையா?

ப: அந்தக் கையை நம்பித் தானே கையில் இலஞ்சம் வைக்கிருேம்.

**எம். டி. எம். ஸவாஹிர், 47, லேன், வெள்ளவத்தை.**

கே: உலகமே மாயம், வாழ்வே மாயம், மனிதனும் மாயமா?

ப: மனிதன் மாயா ஜாலம்.

**பி. தில்லைநாதன், இரத்தினபுரி.**

கே: தன்வாழ்க்கையில் இலட்சியம் இல்லாத மனிதனைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: வென்ற பக்கம் சாய்வார்.

**செல்வி. தவயோகம், மாமூலை முள்ளியவளை.**

கே- பெண்கள் உத்தியோகம் பார்க்கலாம் என்கிறேன் உங்கள் கருத்து?

ப; மூன்று பெண்கள் பிரதம மந்திரியாக இருக்கும் காலத்திலா இந்தக் காலங்கடந்த கேள்வி.

**கே. ஐ. ஏ. பரீட், 147, புளு கொலைத் தெனை, அக்குறணை**

கே: உலகம்போற போக்கைப் பார்த்தால்எதில் போய் முடியும்?

ப: விஞ்ஞானக் கோழிகள் போட்டி மனப்பான்மையில் அணுக்குண்டு முட்டைகள் இடுகின்றன. இடுகாடாகும்.

**சி. சண்முகம், பட்டிருப்பு பாபர் தெரு, கல்முனை.**

கே: ஒருவன் வாழ்வில் துன்பம் வந்தால் பெற்ருேரை நினைப்பாணு கடவுளை நினைப்பாணு?

ப: பணப்பசைஇருந்தால்பெற்ருேரை இல்லாவிடில் பகவானை,

கே. யோகநாதன், நெடுங்கேணி.

கே: அங்கம் குறைந்தவனைப் பெண்கள் காதலிப்பார்களா?

ப: தங்கம் நிறைந்தவனுயிருந்தால் காதலிப்பர்.

எம். சாந்தகலாதன், வதிரி.

கே: அன்றைய பெண்கள் நாணத்தை விரும்பினர்கள்... இன்றைய பெண்கள் வெறுக்கிருர்கள்... ஏன்?

ப: தலை குனிந்து நின்ருல் போட்டோவிற்கு போஸ் கொடுப்பது கஷ்ட மென்பதால்.

து. ஜயந்தன், 7, பண்ணை ரேட் கொட்டடி, யாழ்ப்பாணம்.

கே: தேர்தலில் தோல்வியுற்றவர்கள் இப்போ என்ன செய்வார்கள்?

ப: வென்ற அபேட்சகரிடமுள்ள குறைகளை பொறுக்குவார்கள்.

க. பரமேஷ்வரி, துணுக்காய்.

கே. அக்கால கவிஞர்கட்கும் தற்கால கவிஞர்கட்கும் என்ன வித்தியாசம் மகுடி அண்ணு?

ப: அன்று பழனியைப் பற்றி பாடினர்கள் இன்று இளனியைப் பற்றிப் பாடுகிருர்களென்று சின்னக்குட்டி சவாரித்தம்பருக்கு கூறியிருக்கிருர்,

எஸ். எம். அப்துல் கபூர், லுணுவில் ரோட், அக்குறணை.

கே: தற்போதைய கலாச்சார அமைச்சரைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: உதட்டில் சாயம் பூசும் ரச்சாரத்தை வெறுப்பவர்.

கே. எஸ். ராஜா, லீலா சலூன் கல்முனை.

கே: பொன்னும் பொருளும் ஆண்டவன் எனக்கு எப்போதருவார்?

ப: கடவுள் வழியை விட்டு கடத்தல் வழியை நாடும் பொன்னு ராஜவாகி விடுவீர்.

## மகுடி,

மே/பா. "சிரித்திரன்"
101/4, சென். பெனடிக்ஸ் வீதி
கொட்டாஞ்சேனை.

எஸ். நடராஜா, ஆண்டாங்கனி, எத்தாலை.

கே: மனிதன் எப்படியான வாழ்க்கையை விரும்புகிருன்?

ப: தான் சும்மா இருக்க அரசாங்கம் அரிசி ஆட்டுக்கால் சூப் எல்லாம் சும்மாதரவேண்டுமென்று விரும்புகிருன்.

### பரிசு பெறும் கேள்வி

எம். ஐ. ஏ. லதீப், வார்ட் இல 11, வவுனியா.

கே: தேவாலயங்களுக்கும் காரியாலயங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தேவாலயத்தில் தேவனை தியானிப்பார்கள் காரியாலயத்தில் கடிகாரத்தை தியானிப்பார்கள்.

க. சிவகுமார், மீறும்பிகை பதுளை.


கே: ஆண் உடை அணிந்தால் பெண்களுக்கு ஆண் தன்மை வந்திடுமா?

ப: மீசை முறுக்கும் தன்மை வராதே!

எஸ. எஸ. குணசிங், ஸாகிரா்க் கல்லூரி கமபளை.

கே: இருக்கும்போது இறைவனை எண்ணுத மனிதன் இறக்கும்போது மட்டும் ஏன் இறைவனை எண்ணுகிருன்?

ப: வீட்டில் விளையாடிய ஆசாமிவகுப்பில் நுழையும்போது ஆசானை எண்ணித்தானே ஆக வேண்டும்.



டிரைவர்: என்னய்யா இது பஸ்தரிப்பிடம் புகையிரதப் பாதை தாண்டித்தான் இருக்கிறது. அது வருவதற்கு முன் பெல்லை அடித்து வதை பண்ணுகிறீரே. சுத்த உலகம் தெரியாத ஆளாக பஸ்ஸில் ஏறிவிட்டீரே.

பிரயாணி: உலகம் தெரிந்து தானப்பா பெல்லை அடித்தேன். புகைரயிதக் கடவை தாண்டுமுன் நான் உயிரோடு இறங்க வேண்டாமா?

டிரைவர்: ?.........?.........?.........

பா. மனேரமா
கிருண்பாஸ்,

# கும்..கும்..

—மீசாலைச் சந்திரன்

ஔவையார் படத்திற்குப் பிறகு சினிமாவே பார்க்காதவன் நான். அப்படியிருக்க நான் இன்றைக்குச் சினிமாவுக்குப் புறப்படுகிறேனென்றால் அதிசயம் தானே? ஏதோ நல்லதொரு புராணப் படம் என்றார்கள். அதுவும் இன்றைக்குத்தானும் கடைசி நாள். படத்திற்குப் போவதென்றால் எத்தனை வேலைகள் முடித்துப் போக வேண்டும். எல்லா வேலைகளையும் முடித்து விட்டு வேட்டியைக்கட்ட அறைக்குள் நுழையவும் சுவர்க்கடிகாரம் இரவு ஏழு மணி என்று அறிவிக்கவும் சரியாக இருந்தது. முதலாவது காட்சி மாலை ஆறு மணிக்கே ஆரம்பமாகிவிடும். இனிமேற் போனால் இரண்டாவது காட்சிக்குத்தான் போகலாம். இரண்டாவதோ முதலாவதோ எப்படியும் அந்தப்படத்தைப் பார்த்து விட வேண்டுமென்ற ஆவலால் உந்தப்பட்டவனாக விடுவிடென்று புறப்பட்டுக் கொண்டு சைக்கிளை எடுத்தேன் சைக்கிளுக்கு 'லைட்' இல்லையென்பது அப்போதுதான் ஞாபகம் வந்தது. இராவிருட்டியில் யாராவது என் மேல் வந்து மோதிவிடாதிருப்பதற்காக திரீரோசொன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே சைக்கிளை வேகமாக மிதிக்கலானேன்.

சைக்கிள் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. திடீரென்று 'டேய்' என்ற சத்தம் கேட்டு 'கிரீச்' சென்று ஒரு கால் பிறேக் போட்டு நிற்பாட்டி ஒரு காலை நிலத்தில் ஊன்றியபடி நின்று கொண்டிருந்தேன். டோச் லைட்டை அடித்தவாறே இருவர் என்னை நோக்கி வந்தனர். யாராக இருக்குமென்று சிந்திப்பதற்குள் அவர்களே தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். 'அடோ' பன்டி ராவுலே லாம்பு இல்லாமே இத்தனை வேகமாப் போறியே? பிடுங்கடா வால் டியூப்பை...' என்று ஆணையிட்டார் அந்தப் பொலிஸ் காரர் எனக்கு உடம்பெல்லாம் வியர்க்கத் தொடங்கி விட்டது சைக்கிள் பெடலிற் கால் தாளம் போட ஆரம்பித்து விட்டது. இதென்னடா வம்பு என்று எண்ணியபடியே சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினேன்.

முழுக்காற்றையும் திறந்து விட்டால் இன்று படம்பார்த்த பாடில்லை என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே 'உஸ்ஸ்...' என்று முன் சில்லிலிருந்து சப்தம் கேட்டது- அவர்களுள் ஒருவர் வால்டியூப்பைப் பிடுங்கித்தூர எறிந்துவிட்டு உருட்டிக்கொண்டு போ என்றார். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நான் சைக்கிளையும் உருட்டிக் கொண்டு அப்பால் விரைந்தேன். இப்படியே போனால் இன்றைக்கு இரண்டாவது காட்சியும் பார்த்த பாடில்லை முன்சில்லுக்குக் காற்று கறிதும் இல்லை மெதுவாகப் பின் சிரியரில் ஏறி இருந்து கொண்டு பெடலை அமுக்கினேன் சைக்கிள் விரைந்தது.

தியேட்டரை அடைந்த போது படம் ஓடிக்கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. ஓடிப்போய் கலரிக்கு ஒரு டிக்கட் எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தேன். உள்ளே ஒரே விசிலடிப்பு ஆரவாரமாயிருந்தது. இதென்னடா? புராணப் படத்திற்கும் விசிலடிப்பா? என்றவாறே உள்ளே அமர்ந்தால் திரையில் கும்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மெதுவாக அருகிலிருந்தவரை சுரண்டி இதென்ன புராணப் படம் என்று விட்டு ஏதோ குத்துச் சண்டைப் படம் காட்டுகிறார்கள்? என்று கேட்டேன் அதற்கு அவர் புராணப்படம் பக்கத்து தியேட்டரில் தான் நடக்கிறது. இங்கே சண்டைப் படம் தான் என்று கூறிவிட்டு இரண்டு விரல்களை வாய்க்குள் வைத்து பலத்த விசில் சத்தம் ஒன்றை எழுப்பினார். அதைத் தொடர்ந்து பல விசில்கள் எழும்பின.

இனியென்ன செய்வது? இதையாவது பார்த்துவிட்டுப் போவோமென்று இருந்தேன். அப்போது திரையில் வணக்கம் காட்டப்பட்டது எல்லோரும் எழுந்து சென்றனர். எனக்குக் கோபம் தலைகால் தெரியாமல் வந்தது, மனேஜரிடம் போய் விஷயத்தைக் கேட்டேன். அதற்கு அவர் இப்போது முடிந்தது முதலாவது காட்சி என்றும் இனிமேற்றான் இரண்டாவது காட்சி ஆரம்பமாகும் என்று கூறினார்.

அவரிடம் அறுபத்தைந்து சதம் நஷ்ட ஈடு கோர விரும்பாமல் உடனே ஓடிப்போய் சைக்கிளையும் எடுத்துத் தள்ளிக் கொண்டு பக்கத்துத் தியேட்டருக்கு ஓடினேன் இரண்டாவது காட்சிக்கு புராணப்படம் பார்க்க

---

ஒருவர்: மகன் இப்ப என்ன செய்யிறார்.

மற்றவர்; முந்தி வேலை இல்லாமல் இருந்தவன் இப்ப வேலை நிறுத்தத்தில் நிற்கிறான்!

—ப. நாதன்

# ஒய்யப்பங் கங்காணியார்

(குறிஞ்சிதாசன்)

இது என்னாங்குரேன்; யாழ்ப் பாணத்துல கோயில்களயெல்லா மூடி வச்சிக்கினு பெரிய ரோதனயா இருக்குதுங்களாமே! அது யேங்குறேன்! கீழ் சாதிகார மனுஷாள் போவக் கூடாதுன்னு அடச்சிப்பிட்டா அதுல என்னாங்குறேன் நாயம் இருக்கு? மனுஷாள் எல்லாத்துக்குமே சாமி கும்புடுர 'ரைட்டு' இருக்கக் கொல இவனுக இன்னாய்யா கோயில பூட்டிவச்சிக்கினு சர்க்கீஸ் வெயாட்டா காட்டுருங்க?

இன்னாய்யா இது யாழ்பாணத்துல தானேய்யா பெரிய பெரிய படிப்பாளிங்களும், அறிவாளிங்களும் இருக்கதாக சொல்ருங்க. அதுல வேற 'டிகிரி' படிப்பு படிச்சவுக வீட்டுக்கு ரெண்டு பேரு இருக்காங்களாம், இப்புடியெல்லாம் இருந்துமாய்யா கோயில் கல்ல இம்மாண்டு கூத்து நடக்குது. இவுகள்ளாம் இன்னாய்யா படிப்பாளிக? மனுஷாள் சாதிய மேல் சாதி, கீழ் சாதி அப்பிடீன்னு பிரிக்க சொல்லி இன்னா 'டிகிரி' பொய்த்தகத்துலய்யா சொல்லி குடுத்துருக்காக. இவுகல்லாம் படிக்க செலவு செஞ்ச காசுல இன்னா ரெண்டு தூரு தேயில செடிய வச்சா ரெண்டு றாத்தல் கொழுந்தாவது கூட பிச்சிருக்கலாம். படிச்சாகலாம் படிப்பு பம்மாத்து படிப்பு. டிகிரி எடுத்திருக்காகலாம் 'டிகிரி' அவா எடுத்த டிகிரிய கொண்டு போயி அவாவூட்டு எதுலயோ போட்டு தண்ணிய ஊத்தத் தாய்யா வேணும், 'எல்லாந் தான் படிச்சீக—இன்னா பண்ணி கிழிசசீக?' அப்புடீன்னு ரேடியோவுல பாடுருகளே சும்மா



வாய்யா! கிழிஞ்சி போன படிப்பு...! கிழிஞ்சிபோன டிகிரி!

கீழ்சாதிகாரவுக யேன் கோயிலுக்கு போவக்கூடாதுண்ணு கேட்டா இன்னா பதில் சொல்ரு தெரியுமாய்யா? கீழ் சாதி காரவுக சுத்தமில்லாத மனுஷாளாம் வித்ததடி மாமி கொத்துதடி கோழின்னானும்! அவா சுத்தமில்லாட்டி சோப்ப வாங்கி குடுத்து கழுவிக்கிட்டு போவச் சொல்லு அதோடய்யா உடுப்புல சுத்தமா கோவிலுக்கு இப்ப வாரவுகள்ள எத்தினி பேரய்யா உள்ளத்துல சுத்தமா வாராக?

அது சரிங்குறேன், கீழ்சாதி, கீழ்சாதி அப்புடீன்னு சொல்ருக இம்புட்டும் சொல்லிபுட்டு கண்ணப்ப நாயனாரையும், நந்தனாரையும் பத்தி பேசுருகளே! இவுகள்ளாம் யாருன்னு நெனச்சிக் கிட்டாக.


பொய்த்தகத்துல படிச்சி 'டிகிரி' எடுத்தவுக அந்த பொய்தகத்தயும் 'டிகிரி' சர்ட்டிபிக்கட்டையும் அடுப்புல போட்டு எரிச்சிட்டு கூதல் காய்ரது தாய்யா சரியான வேல. அத எப்பய்யா இவுக செய்வாக?

---

தந்தை: எப்பிடி பரீட்சை நன்றா எழுதினியா?

கஞ்சத்தனமுள்ள மகன்: நான் பேனாவிலுள்ள மை வீணாப் போடுமென்று ஒண்டுமே எழுதவில்லை!

---



ஒருவர்: உமக்குச் சின்னத்துரையைத் தெரியும்தானே?

மற்றவர்: ஓ... தெரியும் அவர் பெரியசாதிக்காரன்...கண்ட இடத்திலும் தண்ணி குடியார் ஆனால் கண்ட இடத்திலும் தண்ணி போடுவார்!

—ஜோக்கிரடீஸ்

# கதா காலக்ஷேபம்



"ஸ்வாமி சிப்ளாஜி"

மெய்யன்பர்களே!

ஆதௌ கீர்த்தனாரம்ப காலத்திலே இன்னிக்கு நான் சொல்லப் போற சப்ஜெக்ட் பனைமரம். என்ன ஸ்வாமி சிப்ளாஜி உலகத்திலே கதை சொல்ல எவ்வளவோ விஷயங்கள் இருக்கே இருந்திருந்தும் மரத்தைப் பத்தி சொல்லப் போறேங்கறேள். இது என்ன கண்ராவின்னு நீங்க பலபேர் நினைக்கறது எனக்கு புரியறது. ஆனா நான் சொல்றதை கேட்டப்பறம் நான் சொல்லப் போற விஷயம் எவ்வளவு முக்கியமானதுங்கறது உங்களுக்கெல்லாம் புரியும்.

மரத்துக்கு ஓரறிவு, மனுஷனுக்கு ஆறறிவுன்னு பெரியவா சொல்லுவா. ஆனா இந்த ஆறறிவு படைச்ச மனுஷனை விட ஓரறிவு படைச்ச மரம் எவ்வளவு பிரயோஜனமா இருக்குன்னு உங்களுக்கே தெரியும். அதுமட்டுமில்லை அன்பர்களே! ராமாயணம் எழுதின வால்மீகி மஹரிஷியைப்பத்தி உங்களுக்குத் தெரியும். அவர் பூர்வாசிரமத்திலே ரக்ஷன்ங்கற பேரோட வேடனா இருந்தவர் நாரத முனிவர் அருளாலே ஞானம் பொறந்து தான் செய்த பாவங்களை நினைச்சு துக்கப்பட்டு. பகவானை நினைச்சு தவம் பண்ண ஆரம்பிச்சாராம். நாரத முனிவர் அவரை ராமஸ்மரனை பண்ணச் சொல்ல ராமாங்கற வார்த்தை அவர் வாயிலே நுழையாததினாலே, நாரதர் வால்மீகியாகப்பட்ட ரக்ஷனை, மராமரா என்று ஜபிக்க சொல்ல அது ராமா ராமா வென்றாயிற்றுங்ற கதையை நீங்க படிச்சிருக்காட்டாலும், வால்மீகி சினிமாவிலே பார்த்திருப்பேள். அவ்வளவு மகிமை வாய்ந்தது இந்த மரம்ராமாயணத்திலே கூட ராமரோட எபிலிட்டியை டெஸ்ட் பண்றதுக்கு சுக்ரீவன் மராமரம்னு சொல்ற ஏழு மரங்களை ஒரே அம்பினாலே விழுத்தச் சொன்னானாம்!

அந்தக் காலத்திலே இருந்து இந்தக் காலம் வரைக்கும் மனுஷனை வாழ வச்சது இந்த மரம் தான். மனுஷன், மரத்தோட இலையை தின்னறான். கனியைத் தின்னறான், ஏன் வேரைக் கூட விட்டு வக்கறதில்லே! தாளுண்ட நீரை தலையாலே தர்ரது மரமா இல்லை மனுஷனா! நம்ம தேசமான இலங்கையைப் பொறுத்த வரைக்கும் அதுக்கு பெருமை மக்களாலே இல்லை. மரங்களாலே தான். பெரியவா புனிதமா நினைக்கற அரசமரத்தை பத்தி நான் சொல்லி உங்களுக்கு தெரியணுங்கறதில்லே. அந்தக் காலத்திலே வெள்ளைக்காரன் ஏன் இந்த நாட்டுக்கு வந்தான். கறுவா மரத்தைத் தேடித்தான் வந்தவன் காப்பியை வைச்சான், தேயிலையை வைச்சான். அன்னிக்கு அவன் வைச்சு, அவன் கொண்டு வந்த நம்ம சகோதரராள் இரத்தத்தை பிழிஞ்சு வளர்த்த டீயை இன்னிக்கு நாம குடிக்கறோம். வித்து பணமாக்கறோம். நம்ம மறந்தாலும் சரித்திரம் மறக்குமா?

எல்லா மரங்களைப் பத்தியும் ரொம்ப உயர்த்தி பாடியிருக்கற கவிகள் கூட பனை மரத்தைப் பத்தி ஒரு படி குறைச்சுத்தான் சொல்லியிருக்கா! நல்ல உயரமா இருக்கறவனைப்பார்த்து பனை மரம் மாதிரி வளர்ந்திருக்கானேன்னு சொல்லறா! அதுமட்டுமில்லே அன்பர்களே

தேம்படு பனையின் திரள் பழத்தோடு
விதை வானுர ஓங்கி வளம் பெற
வளரினும் ஒருவர்கிருக்க நிழலா தேன்னு

வேற சொல்லிட்டா! இதிலே தேம்படு பனைங்கறது தான் டென் பர்சன்ட் புகழ்ச்சி. ஆனா பாருங்கோ! அன்பர்களே! ஆலமரமாகப்பட்டது. வர்ரவாளுக்கெல்லாம் நிழலைக் கொடுத்து, அவாளை தூங்க வைச்ச சோம்பேறியாக்கிடறது. ஆனா பனை மரத்துக் கீழே ஒருத்தன் தங்குவானா! சோம்பேறியா மாறுவானா! ஏன் பனை மரம் மட்டுமென்ன! நம்மடவா கூட, ஒவ்வொருத்தனும் தன் காரியத்தைதானே பார்த்துக்கணும். உதவி பண்றது ஒருத்தனை சோம்பேறியாக்கி கெடுத்துடும்ன்னு, உதவி பண்ணாம இருக்கான்னு, யாரோ சொல்லி கேள்விப்பட்டிருக்கறேன். உங்க காதிலே போட்டு வைக்கிறேன்.

நம்ம புராணத்துள்ளே பெரியவா காமதேனு, கற்பக விருக்ஷம்ன்னு மனதாலே நினைச்சதையெல்லாம் கொடுக்கக் கூடியதுன்னு சொல்லுவா? அப்பிடி பார்த்தா பனைமரத்தை காரம் பசுன்னு சொல்லலாம் தானே ஏன்னா காரம்பசு கன்னு போடறவரைக்கும் வற்றாம பால் கொடுக்கும். பனை மரமும் பால் குடுக்கறதுதானே! இந்த பனை மரத்து பாலைக் குடிச்சு எத்தனை பேர் ரொம்ப ஹாப்பியா இருக்கா. ஒரு சின்னக்கதை இரண்டு பேர் பனமரத்துக்கு கீழே இருந்து பால் குடிச்ச சந்தோஷத்திலே பேசிண்டு இருந்தாளாம். ஒருத்

தன் கேட்டானும் ஏண்டா பனே மரம்ன்னு பேர் வந்துதுன்னு மத்தவன் சொன்னும் அது பனே மரம் இல்லேடா பானே மரம். பனங்காயை விட பெரிய சைஸ் பானே பானேயா தொங்கறதினு லேயும் அதுக்கு பானே பானேயா பால் கொடுக்கறதனுலேயும் பானே மரங்கற பேரு உண்டா யிருக்கனும். நாளாவட்டத்திலே பானேயிலே கால்போய் பனேயா யாடுத்துன்னு. இதை நான் சொல்லலே அன்பர்களே! நம்ம சவாரித் தம்பருக்கு சின்ன குட்டி சொல்லியிருக்கிருர் எப்பிடி நம்ம பனேயாராய்ச்சி.

பனேமரத்தை ஓலேயிலே யிருந்து, லேசான கிழங்கு வரை யும் மனுஷன் எப்பிடி உபயோ கப்படுத்திக்கருன்னு. நான் சொல்லி போரடிக்க தேவை யில்லே. ஒண்ணுங் கிளாஸ் புஸ் தகத்தை யெடுத்தேள்னு பனே மரத்தைப் பத்தி ஒரு பாட்டே யிருக்கு, 'பனே மரமே நீ ஏன் வளர்ந்தாய்ன்னு'

இவ்வளவு மகிமை பொருந் திய பனே மரத்தை பத்தி ராஜாங் கத்துக்காரர் பனே யாராய்ச்சி பண்ணப் போருர்களாம்.

ரொம்ப, ரொம்ப வரவேற்க வேண்டிய விஷயம், பனம் பாலே நம்ம சிங்கள சகோதரர்கள் கூட விரும்பி சாப்பிடுவா. ஏன் இதுக் காக வேண்டி ஊருக்கு போயிட்டு வர நம்மடாள்கள் எத்தனே பேர் இல்லே ஆனு பனே மரத்தைப் பத்தி ஆராய்ச்சி பண்றவாளுக்கு பனம்பாலே அதிகமா காட்டப் படாது. காட்டினு ரிஸல்ட் எப் பிடியிருக்குன்னு நான் சொல்லத் தேவையில்லே.

ஆகையினுலே, பனேமர ஆராய்ச்சி எந்தளவுக்கு ஜனங் களுக்கு பிரயோஜனப்படும்ங்க றதை பொறுத்திருந்து பார்ப் போம்! பனே மரத்தை பத்தி சொல்றப்போ ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வரது. இந்திய ஜனுதிபதி திரு. கிரியவர்கள் இலங்கை வந்தாரோன்னே! அவர் அப்ப யாழ்ப்பாணம் போயிருந்தப்போ, அவருக்கு பனே மரத்தினுலே செய்யப்பட்ட அலங்காரமான கைத்தடியை குழந்தை செல்வி. தங்கராசாபரிச விச்சாள் ஜனுதிபதியும் கைத்தடி யைப் பத்தி ரொம்ப புகழ்ந்து சொன்னுராம் அப்பிடி கைத் தடியை பரிசாக் கொடுத்தப்போ எடுத்த படங்கூட இதோட போட்டிருக்கு.

ஆனு இவ்வளவு கொடுக்கற பனேமரம் தான் கொடுக்கறதைப் பத்தி ஏதாவது பேசறதா! கொடுக்கறதைக் கொடுத்துட்டு கம்முன்னு சைலண்டா இருக்கு.




ஆனு மனுஷனே! ஏதாவது ஒண்ணுக்கு உதவி பண்றதுன்னு உதவி பண்ணப்போருர்ன்னு படத்தோட பத்திரிகையில் செய்தி கொடுக்கருர்ன்னு ஒரு படம் இப்பிடி, கொடுக்கப்போற தாக சொல்லியே விளம்பரம் தேடிக்கிருன்.

இதையெல்லாம் பத்தி சொன்னு **வீண்** வம்பு ஒதைச் சாலும் ஒதைப்பா. ஆகையி னுலே நல்லதையே பார்போம், நல்லதையே சொல்வோம், நல்ல தையே செய்வோம்ன்னு இன் னிக்கு பிரசங்கத்தை இத்தோட முடிச்சிக்கிறேன்,

நீ நாம ரூப முலகு

**நித்திய ஜெய மங்களம்**



ஆசிரியர்: அந்தக் காலத்தில் இந்தியா இலங்கை உறவுக் கும் இந்தக்கால உறவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மாணவன்: அன்று சீதையைக் கடத்தி வந்தார்கள் இன்று சாரியைக் கடத்தி வருகிருர் கள்!

—ஜோக்கிரடீஸ்

---

ஆசிரியர்: உங்கள் மகனேக் கம் போடியா எங்கே என்று கேட்டேன். முழிக்கிருன்.

அப்பா: ஏண்டா கம்பைக் கொண்டு ஒடியா என்ருல் முழிக்கிறதா தேடிக்கொடுக் கப்படாதா?

ஆசிரியர்: ...?...?...?

பா. மனேரமா
கிருண்பாஸ்



மதிப்புரை

நூல்: விழிச்சுடர்

ஆசிரியர்: யாழ்நங்கை

வெளியீடு: தமிழருவிப் பதிப்பகம், கலாதேவி அச்சகம். சுன்னுகம்

விலை. 2-25

விழிச்சுடர், வேப்பமரம் என்னும் இருகுறு நாவல்களை உள்ளடக்கியது இந்நூல். விழிச்சுடர் கணவனல் கைவிடப்பட்ட வாழாவெட்டியையும், வேப்பமரம், காதலனல் உதறித்தள்ளப்பட்ட அபலையையும் வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. பிரச்சனைகளை சமூக சிந்தனைக்கு விட்டு விடாமல் பரிகாரமும் கூறுயுள்ளார். அதாவது இவ்விரு பெண்களையும் சாவின் கைக்குள் சிக்கவிடாமல் புது வாழ்வளித்து சமுதாயப் புரட்சிக்கு வழிகோலியுள்ளார்.

'மனிதர்கள் எல்லாருமே தவறு செய்பவர்கள்தான். குற்றத்தை மன்னித்து அவர்களையும் மனிதர்களாக வாழ வைப்பதுதான் மனிதத் தன்மை. ஆனல் தவறிலும் ஆண், பெண் என்று ஏன் பாகுபாடு காட்ட வேண்டும். ஆண் செய்யும் பாதகங்களை மன்னித்து ஏற்க தயாராத இருக்கும் மனிதர்கள் பெண்கள் செய்யும் குற்றங்களை மட்டுமேன் இமாலயத் தவருகக் கணித்து துன்புறுத்துகிருர்கள். பெண்கள் மனிதப் பிறவிகளே இல்லையா? ஏன் அவர்கள் தவறே செய்யாமல் இருப்பதற்கு என்ன தெய்வங்களா? ஆண் ஆயிரந்தடவை பிழை செய்தாலும் அவனை மன்னித்து அவனை முழு மனிதனுக ஏற்றுக் கொண்டு வாழ்வளிக்கும் உலகம் பெண் ஒரே ஒரு முறை பிழை செய்தாலும் கொக்கரிக்கிறதே என்ன அநியாயம்'— ஆணின் தவருன போக்கையும் சமுதாய மனப் பான்மையும் இவ்வாறு சந்தர்ப்பத்திற்கேற்ப தருணத்தில் சாடும் கதாசிரியரின் கண்ணேட்டம் நியாய பூர்வமாகப்படுகிறது. கதாசிரியர் பெண்ணுக இருப்பதால் பெண்ணின் அடி மனத்தளத்தில் நடமாடும் உணர்ச்சி அலைகளை கரையேற்றிக் காட்டுகிருர்.

வார்த்தைகளைத் திணித்து, திணித்து சொற்சிலம்பமாடாமல். வாசகனைத் திக்குமுக்காடச் செய்யாமல் வெகு சரளமாக பழகுதமிழில் எழுதியுள்ளார்,

—மதித்துரை—

நண்பர்: உங்கள் பையனைப் பள்ளிக்கூடத்தில் இருந்து வரவில்லை என்று நேற்றுத் தேடினீர்களே. எங்கே வலை போட்டுப் பிடித்தீர்கள்?

மற்றவர்: 'ஓடும் நதி'க்குப் போனேன். அங்கே பிடித்தேன்!

பா. மனேரமா
கிருண்பாஸ்

★ ★ ★

ஒருவர்: சாஸ்திரியார் ஒரு நல்ல நாள் பார்த்துச் சொல்லுங்க?

சாஸ்திரியார்: என்ன கலியாணத்திற்கா?

ஒருவர்: இல்லை கடன் கொடுக்கிறதிற்கு...

—ஜோக்கிரடீஸ்


## ஆண்டொன்று போனல் மலரொன்று வரும்!

எழுபத்து இரண்டு பக்கங்களோடு எண்ணற்ற துணுக்கோடு, எழிலோடு, ஏற்றத்தோடு தயாராகிக் கொண்டிருக்கிறது சிரித்திரனின் ஆருவது ஆண்டு மலர்!

விடயதானங்கள் செய்ய விரும்புபவர்கள் விறுவிறென்று எழுதி அனுப்புங்கள். விரும்பி படிப்பவர்கள் வழி மேல் விழிவைத்து காத்திருங்கள்.

சிரித்திரன் ஆருவது ஆண்டு மலர்! விலை ரூபா 1-00

# ஒரு ஓட்டலில் மாட்டிய அறிவித்தலுக்குப் பதிலடி

தயவு செய்து இலையைத் தொட்டியில் போடவும்
மேசையில்விட்டு அசுத்தப் படுத்த வேண்டாம்.

தயவு செய்து கறியை இலையில் போடவும்
சட்டையில் விட்டு அசுத்தப் படுத்த வேண்டாம்.

பா. சுபாஷிணி

கிருண்பாஸ்

# படம் ஓடுகிறது வாழ்க்கை ஓடவில்லை

இரண்டாம் உலக யுத்தத்தின் போது படையில் சேர்ந்த அவன் போர்முனையில் நூற்றுக் கணக்கான எதிரிகளை எமனுலகுக்கு அனுப்பினன்; சிறைப் பிடித்தான். ஏறத்தாழ 240 எதிரிகளை இக் கதிக்கு ஆளாக்கினன் என்று அவன் கணக்கு கூறுகிறது இவனுடைய அரும் பெரும் சாதனையைப் பாராட்டி அமெரிக்க நாடு தேசிய வீரனுக்கிக் கௌரவித்தது.

யுத்தம் முடிந்த பின்னர் திரையுலகத்திற்குள் புகுந்தான். 40 படங்களுக்கு மேல் நடித்து அகில உலகமெங்கும் விசிறிகளை பெற்றான். இவனுடைய படத்திற்கு ஏகப்பட்ட வசூலாவதைக் கண்ட தியேட்டர் முதலாளிகள் அந்த வசூலிலும் ஒரு பங்கைக் கொடுக்கத் தவறவில்லை. அவனுடைய வாழ்க்கையையே படமாக்கி வெளியிட்டனர். அது ஐந்து கோடி பவுனுக்கு மேல் சம்பாதித்துக் கொடுத்தது. இன்றும் கூட உலகத்தின் எந்த ஒரு மூலையிலாவது ஓடிக் கொண்டு தான் இருக்கும்.

ஆனால் இன்றோ, புகழின் உச்சாணிக்கிளை ஒடிந்து விழுந்து நொடிந்து போய் விலாசமே இல்லாமலிருக்கின்றான். ஆயிரக் கணக்கில் கடனுக்கு ஆளாகி, கடந்த ஏழு ஆண்டுகளாக இரவு தூக்கமின்றி புரண்டு கிடக்கின்றான். தூக்கமாத்திரைகள்தான் கண்ணயர்ந்திருக்க வழி செய்கிறது. அவன்தான் துப்பாக்கி வீரன் ஆடி மர்பி.

சப்பாத்தில் ஒரு துண்டைப் போடுவதற்காக நூறு டாலரை வீசியெறிந்த ஆடி மர்பி இன்று புது சப்பாத்து வாங்க வக்கில்லாமலிருக்கிறான் இருந்த சொத்துக்களை விற்று கராஜ் ஒன்றில் வசித்து வருகிறான்.

'ஒரு காவற்காரனைப்போல் அஞ்சியஞ்சி அந்நியனாக வாழும் இந்த வாழ்க்கையை வருடக் கணக்கில் ஓட்டிவருகிறேன். என் மக்களின் வாழ்க்கையைப் பாலைவனமாக்க மாட்டேன். இப்பொழுது அவர்கள் வளர்ந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஒரு வழிபார்ப்பேன்' என்று சொல்லும் ஆடி மர்பிக்கு இப்பொழுது வயது 40

அவரோடு ஒட்டிக் கொண்டிருக்கும் நண்பர்களைச் சேர்த்து குறைந்த செலவில் படமொன்று தயாரிக்கப்போகிறார்கள். அவருடைய மகன்களான பதினேழு வயதான டெரி, பதினைந்து வயதான தேம்ஸ் இருவருக்கும் இந்தப் படத்தில் சிறு பாத்திரங்கள் கொடுக்கிறார்.

ஆடி மர்பிக்கு மீண்டும் புகழ்பெற வேண்டும் என்ற ஆசையில்லை. பொருளாதாரம் சீரடைந்து குபேர வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணமும் இல்லை. மாண்டவன்மீண்டு விடுவான்என்றுநிரூபிக்கும்நினைப்பும் இல்லை. அவருடைய இரு மகன்களுக்கும் ஒரு வழியைத் தொடக்கி வைக்க வேண்டும் என்பதே ஒரே நோக்கம் இதற்காகவே இப்படத்தைத் தயாரிக்கப்போகிறார்.

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
- போன்: 35237 -


# நாலுபேரைக் கேட்டோம்

கடந்த முறை ''நாலு பேரைக் கேட்டோம்'' பகுதியில்எழுப்பப் பட்ட பிரச்சனையில் ஏராளமான வாசகர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

சமூகப் பிரச்சனைகளைக் கலை மூலமாக எழுப்புவதென்பது மருந் தைத் தேனுக்குள் கலந்து கொடுப்பது போலாகும்.

இதோ இவ்வாரக் கேள்வி:- பொருளாதாரச் சமத்துவம் ஏற் படுத்துவதால் இன, மொழிச் சமத்துவம் ஏற்படுமா?

பதிலைத் தாளின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி அனுப்பவும். இது ஒரு நிபந்தனையல்ல; வேண்டுகோள்.



---

மனோதத்துவவைத்தியர்:-

''என்னால் உன் கணவரின் மன நோயை குணப்படுத்த இய லும்; ஆனால் அதற்கு நிறையப் பணம் வேண்டுமே!''

பெண்மணி:-

''கவலைப் படாதீர்கள்! என் கணவர் இப்போது தான் பெரிய ஒரு ரேசில் குதிரை ஓட்டி முதலி டத்தைப் பெற்றதாகவும், நிறை யப் பணம் கிடைக்குமென்றும் கூறினார்''

வைத்தியர்: ...?...?...?

—அனுப்புபவர்:-
ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்

ஆசிரியர்: உன்னை ஏன் எழுந்து நிற்கச் சொல்லித் தண்டனை கொடுத்தன் தெரியுமா?

மாணவன்: கியூவில் நிற்பதற்கு டிரெயினிங் தாறீங்க!

—ஜோக்கிரடீஸ்




புடவைத் தினிசுகளுக்கு:

''சிங்காரம்ஸ்''

தங்க நகைகளுக்கு:


டைமா நகை மாளிகை

நீங்கள் திருப்தியடையும் வகையில்
சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

விஜயம் செய்யுங்கள்:

47, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலை பேசி: 20875.



# செய்திச் சோலை

எக்ஸ்போ 70 ன் அழகையும், கவர்ச்சியையும் பளபளப்பையும் வர்ணிக்க வார்த்தைகளேயில்லை.

நடிகை சௌகார் ஜானகி.

டிஸ்னிலாண்டை பார்க்காதவர்களுக்கு எக்ஸ்போ 70, பிரமிப்பூட்டுவதாக இருக்கலாம்.

நடிகர் ஓம்பிரகாஷ்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 55 வயதில் பதவியிலிருந்து ஓய்வு பெற வேண்டும்.

—செய்தி—

அறுபது வயதுக்கு மேற்பட்ட அரசியல் வாதிகள் அரசியலிருந்து ஓய்வு பெற சட்டம் வேண்டும்.

—சண்முகதாசன்—

மினி ஆடையை தடை செய்ய வேண்டும்.

—கலாச்சார மந்திரி—

மினியுடை அணிவதால் கால்கள் அழகு பெறுகின்றன.

—செய்தி—

நாட்டைக் காக்கும் நிதிக்கு இதுவரை ஏழரை லட்சம் ரூபாய் வசூலாகியுள்ளது.

—தினகரன்—

ஏழைக் கலைஞர்கள் உதவி நிதிக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதியிடம் ஒரு லட்சம் ரூபாய்கள், ஏ. எல். சீனிவாசனால் அளிக்கப்பட்டது.

—செய்தி—

இலங்கை வாழ் தமிழ், சிங்கள மக்களுக்கு தாய் போன்றவர் எமது சிரிமாவோ பண்டாரநாயகா.


—செய்தி—

இலங்கை வாழ் தமிழர்கள் எல்லோரும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களே!

—செய்தி—

---

புருஷ ரத்தினம்



# ஆச்சி பயணம் போகிறாள்

''இங்கை அப்பிடித்தான், ஆச்சி!''

''உதுவும் படிப்பிக்கிற வையே?''

அருணுசலம் மண்டபத்தைத் தாண்டி நடந்தார்கள்; பல மாணவர்கள் வந்தும் போய்க் கொண்டும் இருந்தார்கள். பல் வகை உடைகள்; பல்வகை அலங் காரம். ஆச்சி நன்கு பார்த்தாள்.

''உதென்ன, பிள்ளை! இந்தப் பொடிச்சி இப்படிச் சட்டை போட்டுக்கொண்டு எல்லாம் தெரியுது...''

''அது ரைட்ஸ்கேட், மாமி.''

''சிவ சிவ'' என்ருள் ஆச்சி.

கலை மண்டபத்திற்கு முன் வந் தார்கள்; பாம் மரங்கள் முன் னுள் வளர்ந்திருந்தன. சிங்களக் கட்டிடக் கலையின் சிறப்பைக் கூறிக்கொண்டு கலைமண்டபம் நின்றது.

''இது கலைமண்டபம் ஆச்சி வகுப்பறைகள், நூல் நிலையம் செனட் புளொக் எல்லாம் இங்கு தான் இருக்கு. உலகிலேயே அழ கான சூழலில் அமைந்த பல்கலைக் கழகம் இது ஒன்றுதான். இங் குள்ள நூல்நிலையம் ஆசியாவி லேயே சிறந்தது, ஆச்சி.''

கலைமண்டபத்திற்குப் பக்கத் தால் இறங்கிய படிகளில் இறங்கி னர்.

''செனட் மண்டபத்தை மாமிக்குக் காட்டுவம்'' என்ருள் செல்வி.

செனட் மண்டபத்தை மாலை வேளையில் மாமிக்குக் காட்ட வந்த தவற்றை அவள் உடன் புரிந்துகொண்டாள். திரும்பிக் கலகா வீதியில் ஏறியபோது ஆச்சி கேட்டாள்:

''ஏன் சோடி சோடியா அந் தத் தூணுகளுக்குக் கிழையும் படி களிலும் இருக்கினம்...?''

சிவராசாவும் செல்வியும் ஒரு வரை ஒருவர் பார்த்துக்கொண்ட னர்.

''சும்மா கதைக்கிறதுக்கு, ஆச்சி?''

'சும்மா கதைக்கிறதுக்குச் சோடியாயே வரவேணும்? கதைக் கிறதுக்கும் வேறை இடமில் லையே? உதுகள் கலியாணம் செய் யுங்களே?''

''சிலது செய்யும் சிலது செய் யாது'' என இழுத்தான் சிவ ராசா-

''இப்பிடியும் இஞ்சை, இருக்கு. உதுகளின்ரை படிப்புக் கெட்டெல்லே போகும்''—இது ஆச்சி.

''கெட்டுப் போறதுமுண்டு, ஆச்சி! உப்பிடித் திரியுறதுகள் 'பெஸ்ற் கிளாசி'லை பாஸ் பண்ற தும் உண்டு.''

''உப்பிடித் திரிஞ்சிபோட்டுப் பாஸ் பண்ணுகிறதோ?''

''ஓமெணை...இங்கத்தைச் சீர் கேடுகளைச் சொன்னுல், நாள் முழுத்தாச் சொல்லலாம், ஆச்சி ஒரு நாளைக்குச் சொல்லாமலே விடப்போறன்.''

நேராகச் சென்ற வீதி, ஓரிடத் தில் முழங்கை வளைவாக வளை வுறுகின்றது.

''இது தான், கிஸ்ஸிங் பெண்ட்'' என்ற செல்வி சிவ ராசாவைப் பார்த்தாள். ஆச்சி கவனிக்கவில்லை.

''இந்த உயரத்திலை இருக் கிறது ஜேம்ஸ் பீரிஸ் விடுதி... அதுக்கு மேலை இருக்கிறது மாக் கஸ் பெர்ணண்டோ ஹோல்... நான் அங்கதான் இருந்தனுன் ஆச்சி!''

ஆச்சி நிமிர்ந்து பார்த்தாள்.

''உதிலை எப்படி நாலு வருஷம் ஏறி இறங்கினுயோ?'' என்றவள் திரும்பிப் பார்த்தாள். 'கிஸ்ஸிங் பெண்ட்' என்ற அந்த வளைவின் கீழ், ஒரு சிறு குளம் தெரிந்தது.

''உது என்ன குளம், பிள்ளை! இதுக்குள்ளையும் பொடியன்களைத் தூக்கிப் போடுகிறவன்களே?''

''அது ஒரு சின்னக் குளம், மாமி! இறங்கிப் போனுல் ஒரு சின்னப் பூந்தோட்டம் போலி ருக்கும்.''

''அப்ப போவம்.''

''இப்ப அதுக்குள்ளை போறது சரியில்லை, மாமி! அங்கை முந்திப் பாத்தம் அதைப் போல இருப்பி னம், மோசமாயும் இருப்பினம். நீங்க வாங்கோ போவம்.''

''எளிய இடம் உந்தப் பொம்

பிள்ளைப்பிள்ளையளையே இனிமேல் இங்கை படிக்க விடக் கூடாது. கெட்டுப் போங்கள்.''



''மீனுக்குப் பொரியோ''

''எல்லாரும் அப்படியில்லை. மாமி நல்லதுகளும் இருக்கு.''

ஹில்டா ஒபயசேகரா மண்டபம் அடுத்து அவர்கள் கண்களில் பட்டது; அது ஒரு பெண்கள் விடுதி. அந்த விடுதிக்குப் பின்னால் மகாவலி கங்கை மென்நடை பயில்கின்றது.

ஹில்டா மண்டபத்திலிருந்து பெண்கள் பலர் கலகா வீதிக்கு வந்தார்கள். அப்போது 'கூய்' என்றொரு சத்தம் எழுந்தது.

''பெண்களா எங்கை போறியள்''

''நாங்களும் வரவே?''

''கூ...கூ...கூய்''

ஆச்சி ஒரு கணம் திகைத்துப் போனாள்.

''ஒன்றுமில்லை மாமி! இப்பிடித்தான்...''

இப்பிடித்தான் சத்தம் போடுவாங்கள், பெண்கள் போகேக்கை... இந்தமாணவர்கள் இப்படித்தான்...''

''அறுந்த படிப்பு...'' எனத் திட்டினாள் ஆச்சி. நீயும் ''இப்படித்தானே இருந்தனீ?'' என்று சிவராசாவைக் கேட்டாள்.

''சீ...இல்லை'' என்றான். சிவராசா. பச்சைப் பொய்.

திரும்பி வீடு வந்து சேர்ந்த போது, ஏழு மணிக்கு மேலாகி விட்டது.

''இதுதான் பல்கலைக் கழகமா?'' என ஏமாற்றத்தோடு கேட்டாள் ஆச்சி.

''இது ஒரு பங்கு, ஆச்சி.''

செல்வி தங்கியிருந்த வீட்டுக் குடும்பத்தினர் அவனையும் அங்கு சாப்பிடும்படி வற்புறுத்தினர். சாப்பிடும்போது ஆச்சி கேட்டாள்.

''நாளைக்குக் கதிர்காமத்திற்கே போகிறோம்...எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?...''

''கண்டியிலிருந்து ஒன்பதரை மணிக்குக் கதிர்காமத்திற்கு நேரே பஸ்...''

செல்வி ஏக்கத்தோடு சிவராசாவைப் பார்த்தாள்.

''நீயும் வா, பிள்ளை...'' என்றாள், ஆச்சி.
செல்வியின் முகத்தில் மலர்ந்தது, தாமரையா?

—[22]——

ஒன்பதரைக்கு வரவேண்டிய பஸ், பத்து மணியாகியும் வரவில்லை. ஆச்சிக்கு அலுத்து விட்டது.

''இவ்வளவு காலத்திற்குப் பிறகு என்னைக் கூப்பிட்ட அப்பன், கடைசிநேரத்திலை ஏமாத்தி விடுவானோ?'' என்றாள்.

''அப்படியில்லை, மாமி கெதியிலை பஸ் வந்திடும்...'' என்று ஆறுதல் கூறினாள் செல்வி.

''சிவராசாவிற்கும் திகைப்பாக இருந்தது. 'எங்களை விட்டிட்டு பஸ் போயிட்டுதோ?''

திரும்பவும் ஒரு தடவை விசாரணைக் கந்தோரில் விசாரித்தான்.

''மொனவத...?' அங்கிருந்தவன் சிங்களத்தில் கேட்டான். சிவராசாவிற்கு அவ்வளவு தூரம் சிங்கள மொழி பரிச்சயமில்லை.

'கதிர்காம பஸ் ஆவ தா?' என்று கேட்டான்.

''ரூ டே நோ பஸ்'' என்றான், அவன் ஆங்கிலத்தில்.

''இன்றைக்குப் பஸ் இல்லையோ?''

சிவராசாவிற்கு எல்லாமே ஒரு கணம் சுழன்றது போலிருந்தது. திகைத்துப்போய் நின்றான்.

'தம்பி, கதிர்காமத்திற்கே?' யாரோ ஒருவர் கேட்டார்: அவன் அவரைப் பார்த்தான். அவர் ஒரு முஸ்லீம் என்பது பார்த்ததும் புரிந்தது. லேஞ்சியை மடித்துத் தலையில் கட்டியிருந்தார்.

'ஓம்'


''இன்றைக்கு பஸ் இருக்கு முந்தி ஒவ்வொரு சனிக்கிழமையும் பஸ்! இப்ப ஒவ்வொரு பிறபோயாவிற்கும் பஸ்...உங்களுக்கு ஒன்றும் தெரியாது சம்பளத்தை வாங்கிக்கொண்டு விசாரணைக் கந்தோரிலை இருக்கின்றான்கள்'' என்றார் அவர்.

சிவராசாவின் நெஞ்சில் பால் வார்த்தது போல இருந்தது.

'நீர் மட்டுமா போறீர்?'

'இல்லை அதோ அம்மாவும் அவவும் வருகினம்.'

''நாங்களும் கதிர்காமத்திற் குத்தான் கதிர்காமத்திலே கடை வைச்சிருக்கிறம்...நாங்க கண்டி தான்-கதிர்காமத்திலே தான் இருக்கிறம்...அதோ பஸ் வருகுது வாங்க சனம் அவ்வளவு இராது...மெதுவாக வாங்க.''



'குளிப்பாட்டுதல்'

''வா, ஆச்சி, செல்வி கவனமா ஏறு.''

ஏறிய உடனேயே பஸ் புறப் பட்டு விட்டது. பதினைந்கு பிர யாணிகள் பஸ்ஸில் இருந்தனர்.

''ஏனும் பஸ் வரச் சுணங்கி யது'' என்று கேட்டாள் ஆச்சி.

''தெரியவில்லே கிழமையிலே ஒரு நாளைக்குத்தான் கண்டியி லிருந்து கதிர்காமத்திற்கு பஸ் ஸாம் ஆச்சி! நல்ல காலம்...இன் றைக்குப் பிறிப்போயா ... பஸ் இருந்தது...''

''முருகன்ரை அருள்'' என்ருள் ஆச்சி.

''இந்த பஸ் இல்லாட்டில் என்ன செய்கிறது?'' என்று கேட் டாள் செல்வி.

''றெயிலில் போகலாம் கண்டி யிலிருந்து பண்டாரவளை மட்டும் றெயிலில் போய், பிறகு அங்கி ருந்து கதிர்காமத்திற்கு பஸ்ஸிலே போகவேணும்.''

'இப்ப இந்த பஸ் எதாலே போகும்?' என்று கேட்டாள், ஆச்சி.



'உதென்ன உடுப்பு'

'கண்டியிலிருந்து கம்பளை, புசல்லாவை, நுவரெலியா, வெலி மடை, பண்டாரவெலே, வெல்ல வாயா, திசைமாறகம என்பன ஊடாக கதிர்காமத்திற்குப் போகும்.'

'பண்டாரவெலேயிலே தான் சீனியற்றை நடுவிலாள் இருக்கி ருள். உந்த இடங்களில் எல்லாம் நின்று நின்றே போம் எல்லாம் பார்க்கலாம் என்ன? பெரிய பெரிய மலேகளுக்கு மேலால எல் லாம் போகுமே? பயமில்லேயே?'

'என்ன பயமெணே? போகிற வழிகளிலே ஒரே தேயிலேத் தோட்டங்களை அதிகமாகப் பார்க்கலாம். றப்பர், கொக் கோத் தோட்டத்களும் இருக்கும் வளைந்து வளைந்து செல்லும் வீதி கள் ஒரே குளிராயும் இருக்கும்.'

'சரியாக் குளிருமே?'—ஆச்சி.


'அப்பிடி இல்லே ஆச்சி!'

,பஸ் எத்தனே மணிக்குக் கதிர் காமத்திற்குப் போகுமாம்?' என்று கேட்டாள், செல்வி.

'இரவு ஏழரை எட்டுக்குப் போகும் ஏன் செல்வி?'

'இப்படியே அவ்வளவு நேர மும் இருக்க வேணுமா?'

'இல்லே...வேணுமானுல் மடி யில் படன்'



'இதென்ன குமரிகள்'

'மாமியிட்ட சொல்லவே?'


'ஒன்றுமில்லே, மாமி! இரவு எட்டுக்குத்தான் கதிர் காமம் போகுமாம். மத்தியானம் சாப்பிட ஏதாவது வாங்கச் சொன்னனுன்.'

பஸ் விரைந்துகொண்டிருந்தது. பாதையின் வளைவுகளில் பஸ் வேகமாகத் திரும்பியபோது, செல்வி அவன் மீது சாய்ந்தாள்.

'ஏன் செல்வி, சாய்கிறுய்?' எனக் கேலி செய்தான், அவன்.

'ஆசை என்றுள், அவள்.

கெலிஓயா என்ற இடத்தைத் தாண்டி பஸ் விரைந்து கொண்டிருந்தது.



'சோடி சோடியாக'

'கெலிஓயா ஒரு முஸ்லீம் கிராமம் செல்வி! இங்கும் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. எனக்கு இங்கு ஒரு ஆசிரிய நண்பர் இருக்கிறுர்...ஷாலி என்று...பலமுறை அவர் வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன் நல்ல நண்பர்.'

'ஓசிச் சாப்பாடு என்ருல் விடமாட்டீர்கள்' என்றுள் செல்வி.

அவன் அவள் முதுகில் பொய்க் கோபத்துடன் கிள்ளினுன்.

'ஆ...!'

ஆச்சி திரும்பிப் பார்த்தாள்.

'மூட்டை என்றுள், செல்வி.

'சிவராசாவின் கையிலோ?' என்று சிரித்தாள், ஆச்சி.

—[23] ——————

கம்பளை நகரில் பஸ் வந்து நின்றது. மிகச் சிறிய தோட்ட நகர் கம்பளை. மகாவலி கங்கையின் இடது கரையில், நாலா புறமும் மலைத் தொடர்கள் உயர்ந்து நிற்க, அமைதியோடு வீற்றிருக்கின்றது, கம்பளை. தாழ்ந்த கூரையுடைய கடைத் தெருக்களும், உயர் கூரைகளையுடைய கடைத் தெருக்களும் கம்பளை எங்கணும் காணலாம்.

சிங்களவர், முஸ்லிம்கள், இந்துக்கள் ஆகியோரின் கடைகள் எங்குமுள; மலைநாட்டுத் தமிழர் களின் கணிசமானவளவு சிறிய கடைகள் இங்குள. கம்பளை பஸ் நிலையத்தினின்றும் திரும்பிப் பார்க்கும்போது முதலில் கண்ணில் படுவது ஒரு இந்துக் கோயில்.

தோட்டத் தொழிலாளர்களே இந்த நகரில் அதிகமுளர். இனி நாம் செல்கின்ற பாதையில் எதிர்ப்படும் இடங்களில் எல்லாம்



'இதுதான் கிஸ்ஸிங் பெண்ட்'

மலைநாட்டுத் தமிழர்கள் அவல வாழ்வு வாழ்வதைக் காணலாம்.

'ஏதாவது சாப்பிடுவதற்கு வாங்குங்களேன்' என்றுள் செல்வி.

'என்ன வாங்க?'

'பாண்...பட்டர்...பழம் வாங்குங்க.'

அவன் வாங்கி வந்தான்.

'உதென்ன ராசா, பெரிய பழமா இருக்கு...?'

'இது யானை வாழைப்பழம்...' என்றுன் சிவராசா: 'யாழ்ப்பாணத்திலும் இருக்குது ஆச்சி! ஆனுல், மலைநாட்டுப் பக்கம் இது அதிகம்.'

—தொடரும்.

—சிரித்திரு——

## குழலும் விழலும்

கென்யா நாட்டு இடையனுன வுல்லி ஷாமோட்டா என்பவன் வழக்கமாக வாசிக்கும் புல்லாங்குழலை உடைத்தெறிந்துவிட்டு 'டிரான்சிஸ்டர்' ரேடியோ போட்டுக்கொண்டு மந்தைகளை அழைத்து வந்தான். கர்நாடக இசையைக் கேட்டு ஒழுங்காக வந்துகொண்டிருந்த மந்தைக் கூட்டம் திடீரென்று சிதறியோடின. கத்திக் கூச்சல் போட்டு பாடும் 'பாப்' இசை (Pop Music) யைக் கேட்டுத்தான் இப்படி மிரண்டோடின. 17 (பதினேழு) ஆடுகள் காணுமற் போய்விட்டன.

# சலசலப்பும்

# முணுமுணுப்பும்

1. ‘பல்லழகு உள்ளவர்களிடம் சொல்லழகு இருக்கும்.’

—‘பொய்ப் பல்லு கட்டியவர்: ‘எந்தப் பல்லு?’

2 ‘இந்தக் காலத்து பெண்கள் பொதுவாக முழுக்க, முழுக்க தங்கள் கணவனேயே நம்பிக்கொண்டிருக்க தயாராகவில்லை.’

—‘எதற்கும்...!’ என்கின்ருன், கையாலாகாத கணவன் ஒருவன்.

3. ‘காந்தி பிறந்த மாநிலத்திலாவது லாட்ரிச் சீட்டு இல்லாமல் இருப்பது மனதிற்கு கொஞ்சம் ஆறுதலைத் தருகின்றது.’

—ஒரு லாட்ரிச் சீட்டுப் பேர்வழி: ‘ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே ‘லாட்டரி’ போலும்.’

4. ‘எத்தனை குழந்தைகள் பிறந்தாலும், தொடர்ந்து நடித்துக்கொண்டிருக்கவே நடிகைகள் விரும்புகின்ருர்கள்.’

—‘பாவம், அவர்கள்! நடிப்பையா பார்க்க போகின்ருேம்,’—ரசிகன் ஒருவனின் பதில்.

5. ‘நோயாளிகள் பயத்தைப் போக்காமல், வெறும் மருந்துகளைக் கொடுப்பதால், எந்தவிதமான குணமும் தெரியாது.’

—ஒரு குழந்தை: ‘எனக்கு மருந்தைக் காணத்தானே பயம்.’

6. ‘நண்பன் ஒருவன்: ‘உங்கள் நண்பர்களிடம், உங்கள் பணக் குறைகளை மட்டும் சொல்லுங்கள்.’

—‘அப்ப, நான் உன் நண்பன்,’ என்ருன் மற்றவன்.

7. ‘செவிடர்களும், ஊமைகளும் நடிக்கும் ஷேக்ஸ்பியரின் மாக்பெத் நாடகம் முழுவதும் சைகை மூலமே நடித்துக் காட்டப்படுகிறது.’

—செவிடர்களும், ஊமைகளும்: ‘நாங்கள்தான் ரசிகர்களும்.’

8. ‘மெல்லச் சாப்பிட்டால் பருமனுகிவிடுவீர்கள்.’

—‘அதுதான் நாம் மெல்ல நடக்கின்ருேமோ?’ என்ருன், பருமனுன ஒருத்தன்.

9. ‘காலையில் உபயோகித்த பால் மிச்சம் இருந்தால், பாலைக் காய்ச்சி குளிர்ந்த தண்ணீரில், பால் பாத்திரத்தோடுவைத்துவிட்டால், பால் மாலைவரை கெடாமல் இருக்கும்.’

—பால்காரன்: ‘பாலுக்கும் தண்ணீருக்குமுள்ள ஒற்றுமை எங்களுக்கு தெரிந்த விசயம்தானே!’

10. ‘அறிவும் ஆற்றலும் சேரும் போதுதான் அற்புதங்கள் பிறக்கின்றன.

—எங்க அற்புதத்தின்ரை தாய் தந்தையரிலை அறிவுள்ளவர் ஆர்? ஆற்றலுள்ளவர் ஆர் என்று திகைக்கின்ருன்—ஆபீஸ் பியோன்.’

[கவலையை மறந்து சிரித்து சிந்திக்கவே எழுதப்பட்டது, யாரையும் துன்பப்படுத்தவல்ல.]

முணுமுணுப்பு: ராதாக்கண்ணு.

# சைலன்ஸ் ப்ளீஸ்!

கோபனேகன் நகரிலுள்ள வாசிகசாலைக்குள் சப்பாத்துக் காலோடு ‘டக் டக்’ கென்று உள்ளே போய்விடமுடியாது. வாசலில் கழற்றி வைத்துவிட்டு அங்கே கிடக்கும் செருப்புகளை மாட்டிக்கொண்டு தான் நுழைய வேண்டும். இச் செருப்பு எந்த விதமான ஒலியையும் கிளப்பாது அமைதியாக வெகு கவனத்தோடு வடிக்கும் வாசகரின் சிந்தனையைக் குழப்பிவிடக் கூடாதே என்பதற்காக இந்த ஏற்பாடு டென்மார்க்கில் இருக்கிறது கோப்பனேகன்.

அவுஸ்திரேலியாவிலிருக்கிறது கென்பரா. இங்கு புத்தகம் எடுக்கவோ, கொடுக்கவோ வருபவர்கள். வசிக்குமிடத்திற்குப் போவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனுல் லொக்கு லொக்கு என்று இருமவோ, ‘அச்சூ... அச்சூ’ என்று தும்மவோ கூடாது இருமலோ தும்மலோ வந்தால் வெளியே வந்து விட வேண்டியதுதான். வெளியே இருமி விட்டு தும்மி விட்டுத் தாராளமாக உள்ளேபோகலாம்.

டொரன்டோவிலுள்ள வாசகசாலையில் நாற்காலியை முன்னுக்கு இழுக்கவும் கூடாது, பின்னுக்குத் தள்ளவும் கூடாது. அப்படி நகர்த்த வேண்டுமானுல் நாற்காலியைத் தூக்கித்தான் வைக்கவேண்டும். இழுக்கும் பொழுதோ ‘கிறீச்’ சென்று சத்தம் எழும்பும்; இந்தச் சத்தம் படிப்பவரின் கவனத்திற்குத் குந்தகம் விளைக்குமல்லவா?




சாவித்திரி: என்ன விசேஷம் அருந்ததி?

அருந்ததி: இரண்டு புது சாரிகள் வாங்கினனான்.

சாவித்திரி: என்ன சாரியள்?

அருந்ததி: இரண்டுக்கும் சினிமாப் பேர்...ஒண்டு சிவந்தமண் மற்றது கைதி கண்ணாயிரம்.

சாவித்திரி: ஏன் அவசரப்படுகிறாய்?

அருந்ததி: என்னுடைய மிஸ்டர் படம் பார்க்க வெளிக்கிட்டு நிப்பார்...கூட்டிக்கொண்டு போக வேணும்...

சாவித்திரி: ஏன் உன்னுடைய அவர் தனியே போக மாட்டாரோ?

அருந்ததி: அவருக்குத் தியேட்டர்கள் தெரியாது...நான்தான் வழி காட்ட வேணும்.

'ஞானப்பழம்'

அது ஒரு புத்தகக் கடை விரு விருவென்று உள்ளே வந்த ஒருவர்.

'ஐயா ஒரு தொழிலாளி இருந்தா கொடுங்கள் என்றார்.

கடைக்காரர் தொழிலாளி பத்திரிகையை எடுத்தவாறே! இப்ப தொழிலாளர்கள் அரசாங்கம் வந்த பிறகு இப்போ எல்லாரும் தொழிலாளி பத்திரிகைதான் படிக்கிறார்கள் என்றார். ஆனால் வந்தவரோ!

'ஐயய்யோ! நான் கேட்டது தொழிலாளி சினிமா பாட்டு புத்தகம் சார்...என்றார்.

ஃ ஃ

அவள்: என் கணவருக்கு மிகவும் பயந்த சுபாவம் டாக்சியிலே ஏறமுந்தி டிரைவருக்கு இருதய நோய் இருக்கான்னு கேட்டுத் தெரிஞ்சு கிட்டுதான் டாக்சியிலே ஏறுவார்.

ஃ ஃ

கடைக்காரர்: ஏனையா வாங்கின சீனியைத் திருப்பிக் கொண்டு வந்த நீங்கள்.

ஒருவர்: வீடு கட்ட மண் தேவையாயிருக்கு நீங்க தந்த சீனியில மண்ணில்லை.

—தர்மினி

ஒருவர்: நீர் போட்டிருக்கிற ஷேட் என்ன விலை?

மற்றவர்: நாப்பது ரூபா.

ஒருவர்: நீர் கழுத்தில கட்டியிருக்கிற 'டை' என்ன விலை?

மற்றவர்: இருபத்தைந்து ரூபாய்

ஒருவர்: உம்மால் சிகரட் லயிட் பண்ண ஒரு ஐந்து சதத்து நெருப்பெட்டி மட்டும் வாங்க முடியாது என்ன?

ஃ ஃ

ஒருவர்: பெரிய குடும்பத்துக்கு உழைத்துநொந்தவன் மாதிரிப் பெருமூச்சு விடுகிறியே.

மற்றவர்: உனக்கு என்னப்பா தெரியும்...பெண்சாதி பிள்ளைகள், வீட்டு முதலாளி, கடன்காரர், திருடர் பிக்பொகேட்... எல்லாருக்குமாகத்தானே உழைக்க வேணும்.

—ஜோக்கிராட்டீஸ்

## சாஸ்திரம்! சாஸ்திரம்!!

ஜியான் ஹிஸரா என்பவன் கனடாவிலிருந்து 12,000 மைல் தூரமுள்ள பிஜி தீவுக்குப் போய் ஐயர் ஒருவரை அழைத்துக் கொண்டுவந்தான். காரணம், சாஸ்திர சம்பிரதாயங்களோடு திருமணச் சடங்கு நடக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆர்னேல்ட் பெனட் மிகச் சிறந்த நாவலாசிரியர். அவருடைய இலக்கிய சிருஷ்டிகள் அத்தனையுமே இறவாத புகழுடையவை என்பதில் சந்தேகமில்லை ஆனல் இவருடைய இதர எழுத்து சொந்தக் கற்பனையில் உதித்ததல்ல; ஆம். 'டிட்பிட்ஸ்' வார சஞ்சிகை நடத்திய போட்டியில் இவரும் கலந்து கொண்டு முதல் பரிசைத் தட்டிக் கொண்டார். இன்னெரு எழுத்தாளரின் கதையைச் சுருக்கி அனுப்பியிருந்தார் என்று பின்னர் தெரிய வந்தது.



ஒருவர்: ஆமாங்க, நீங்க இப்ப பார்த்த படம் எப்படியீங்க?

கிராமவாசி: ஐயோ சார்! அதையேன் கேட்கிறீங்க, நான் படம் பார்க்க நேரம் இல்லாமல் போயிட்டே. எனக்கு மேலே சுழன்று கொண்டிருந்த 'விசிறி' எப்ப கழன்றுடுமோ எனப் பார்த்துக்கொண்டிருந்தேனே!

முதலாமவர்: .........?.........?.........?

விஸ்வநாதன்—தாமோதரம்பிள்ளை




## வேல் முருகா ஊதுபத்திகள்

சிவன்: பக்தா! ஏனைய பக்தர்கள் எல்லோரும் மோட்சத்தை விரும்ப, நீ மட்டும் ஈழத்தில் பிறவி எடுக்க விரும்பும் காரணம் யாதோ?

பக்தன்: எல்லாம் வல்ல பரம்பொருளே! உமக்கு மனமகிழ்ச்சி அளிக்கும் ''வேல் முருகா'' ஊதுபத்திகள் இங்கு கிடைப்பதில்லை. ''வேல் முருகா'' ஊதுபத்திகள் ஈழத்தில் மட்டுமே கிடைக்கின்றமையால் நான் ஈழத்தில் பிறக்க வரம் அருளும் ஐயனே!

தயாரிப்பாளர்கள்:

**ஜெகஜோதி அன் கொம்பனி**

**குருதெனியா, கண்டி.**

நேரம் காட்டும் கடிகாரத்தைப் பணம் கொடுத்து வாங்கலாம்!
நேரத்தைப் பணம் கொடுத்து வாங்க முடியுமா?
நேரத்தின் மகிமையை உணர்ந்து தயாரிக்கப்பட்டதே,

## மில்க்வைற் சலவைப் பவுடர்




### மில்க் வைற் தயாரிப்புகளின் இதர பரிசு விபரங்கள்

(50 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு) ஒரு பொலித்தீன் பாக் அல்லது ஒரு பலவர்ணப் படம்

(100 மில்க் வைற் நீல சோப் உறைகளுக்கு) ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்ரிக் கவர்

(300க்கு மேற்பட்ட உறைகளுக்கு) அழகிய துவாய் ஒன்று அல்லது ஒரு டொக்குமென்ட் பாக்

(20 மில்க் வைற் பார் சோப் உறைகளுக்கு) ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்ரிக் கவர்

(20 மில்க் வைற் சலவைப் பவுடர் உறைகளுக்கு) ஒரு கீப்பேர்ஸ் (திறப்புக் கோர்ப்பது)

(10 மில்க்வைற் நீல சோப் உறைகளுக்கு) யோகக்கலை என்னும் புத்தகம் அல்லது எம்மால் வெளியீடு செய்யப்படும்புத்தகங்களில் ஒன்றை இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற் குறிப்பிட்டபடி மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் காரியாலயத்தில் அல்லது தபாலில் அனுப்பி இலவசப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: மில்க்வைற்

கிளை: மில்க்வைற் டிப்போ, 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.


# சிறுவர் பகுதி



## அரும்பு

அடுத்த மாதம்

ஆரம்பமாகிறது




தேவராசன் 7, பாப்பங் காடு நால்ரோடு, சூரம்பட்டி ஈரோடை-2. கோவைமாவட்டம் தமிழ் நாடு இந்தியா.

[உலகத் தலைவர்களின் படங்கள் சேகரித்தல், கதைப் புத்தகங்கள் படித்தல். உதைபந்து, கூடைப்பந்து, கைப்பந்து விளையாடுதல்]

பி. எம். கந்தையா, போபெத்த எஸ்டேட், லெல்லுப் பிட்டிய.

[பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், வானொலி பழுதுபார்த்தல்]

ஆர். டி. ராஜா, (21) இல. 10. மார்க்கட் வீதி. பாணந்துறை.

[வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு, நாவல் வாசித்தல், தட்டெழுத்தடித்தல்]

ஏ. குலசிங்கம், மனேஜர் மறையடித்தகுளம், ஓமந்தை வயது 20.

[வானொலி கேட்டல், கடிதத் தொடர்பு, கதை எழுதல், முத்திரை சேகரித்தல்]

ஆர். ஜகநாதன், வயது 21 பி. ஏ. 22, வன்னியார் ஸ்றீற், ஈரோடு-1 தமிழ் நாடு இந்தியா.

[இலங்கையிலிருந்து ஒரு பேனா நண்பியை விரும்புகிறார்]

பௌஸியா ஸக்காப், 11 அகைந்துபிடிய பெருஸ்விலா, தர்கா நகர்.

[தையல் கலை, பத்திரிகை, கதை, படித்தல் கட்டுரை, கதை எழுதுதல், வானொலி கேட்டல்]

மு. பஞ்சாட்சரம், புலோலி கிழக்கு பருத்தித்துறை.

[மல்யுத்தம் போடுதல், வானொலி கேட்டல், பத்திரிகை படித்தல்]

### பேனா நண்பர் விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ——————————————————————

முகவரி: ——————————————————————

——————————————————

பொழுதுபோக்குகள்: ——————————————————

——————————————————————————

தயவு செய்து பேனா நண்பர்கள் பகுதியில் எனது பெயரையும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இத்துடன் சிரித்திரன் 1வருட சந்தாப் பணம் அனுப்பியுள்ளேன்.

——————   ——————

திகதி   கையொப்பம்

## நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று

கிட்டி உன்னை நான் காதலிக்கிறேன்.

சுவரில் சாக் கட்டியால் கிறுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதுமே கிரகரிமேகனுக்கு ஆத்திரம் பற்றி எழுந்தது. தன் மனைவியை இன்னொருவன் காதலிப்பதாக எழுதியிருந்தால் எந்த கணவனுக்குத்தான் கோபம் வராது?

மனைவியின் முகத்தைத்தரிசித்துக் கொண்டிருப்பதே கன்மசாபல்யம் என்றும், அவளோடு பேசிக்கொண்டிருப்பதே சொர்க்கம் என்றும் சதாநேரமும் வளைய வளைய வந்த அவனுக்கு இப்பொழுது கிட்டியை ஏறெடுத்தும் பார்க்கவே வேம்பாக இருந்தது. எடுத்தது தொடுத்ததுக்கெல்லாம் கடுகடு வென்று எரிந்து விழுந்தான். ஒன்றும் தெரியாதவள் போல் வழக்கம் போல் நடந்து நாடகமாடும் இவளுக்கு வேறு யாருடனோ தொடர்பு இருக்கிறது. அந்தக் கயவனைக் கண்டுபிடித்தே தீர வேண்டும். என்ற கங்கணத்தில் பணம் கொடுத்து ஒரு துப்பறியும் ஆசாமியையும் அமர்த்திக் கொண்டான்.

கடைசியில் ரகசியம் அம்பலமாகி விட்டது. சுவரில் எழுதியது எந்த ஆண் மகனுமல்ல: ஒரு பெண்தான். அவள் வேறு யாருமல்ல கிட்டி—மேசன் தம்பதிகளின் பத்து வயதுப் புதல்வி கென்னிஸிப்பர்தான்.

'அம்மா மீதுதான் அப்பா கொள்ளை அன்பாக இருக்கிறார்: என் பக்கம் அப்பாவை இழுக்கவே இப்படி சுவரில் எழுதினேன் என்றாளே பார்க்கலாம் அவள்.

(இந்த வேடிக்கை நியூஸிலாந்தில் நிகழ்ந்தது)

"ஆயிரம் குற்றவாளிகள் விடுதலையாகலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது" என்று நீ அடிக்கடி கூறுவாயே அம்மா குற்றவாளி விடுதலையாகி விட்டான் அது சரி ஆனால் நிரபராதி தண்டிக்கப்படுகிறானே அது ஏனம்மா?

காதலின் அந்த வேல்விழிக்கு கண்ணீர் ஒன்றையே காணிக்கையாக்கி விட்டு அவளை பிரிந்தேனே அது ஏனம்மா? கனவாக, காதலாக, கற்பாக இருந்த ஒன்றை சம்மட்டியால் அடித்து நொருக்குவது போல நொருக்கிவிட்டு வந்தேனே அது ஏனம்மா?

# "உன்னைக் காண எத்தனை யுகங்களோ!.."

பதுளை. ராகுலன்

இது என் திடீர்முடிவு அல்ல. நாட்கணக்காக மாதக் கணக்காக அணு அணுவாக சிந்தித்து பெற்றமுடிவு இது. சிலர் வாழப்பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள். சிலர் சாகப்பிறக்கிறார்கள்; செத்தும் விடுகிறார்கள். ஆனால் நானோ செத்து வாழ்வதாக நினைக்கிறேன். வாழும் ஒவ்வொரு கணமும் செத்து செத்தே வாழ்கிறேன். இந்த வாழ்வின் எல்லை என் மரணத்தில் தான் பரிணமிக்க முடியும் என்ற கசப்பான உண்மையை விரும்பியோ விரும்பாமலோ என்றோ நான் தெரிந்து கொண்டேன். இருந்தாலும் நினைத்த உடனேயே விடைபெற்றுக் கொண்டு செல்ல நானென்ன அயல்நாடா செல்கிறேன்! ஒட்டிக் கொண்டிருக்கும் உரிமைகளையும் கடமைகளையும் உதறித்தள்ளிவிட்டு ஒரு நீண்ட பயணத்தை— நிரந்தர பயணத்தை மேற்கொள்வதும் அத்தனை சுலபமான ஒரு காரியமல்ல அப்பாடா, எப்படியோ சமாளித்துக் கொண்டேன். இனி புது உலகத்தை நோக்கி போக எந்தத் தடையுமே இல்லை.

நாளை காலையில் இந்த உலகத்தில் 'நான்' இருக்கவே மாட்டேன். என் உடல் பிணமென்ற பெயரோடு கிடக்கும். அந்த பிணத்தை சுற்றி பலர் நிற்பார்கள். அங்கு தத்துவ சம்பாசனைகளும், அனுதாபங்களும் அளவின்றி பிறக்கும். அம்மா என்னை அசையாமல் சில கணங்கள் பார்த்துக் கொண்டிருப்பாள். ஆனாலும் அவள் கண்கள் நீரை சிந்தாது; அவைதான் என்றோ வற்றிவிட்டனவே! 'இதயப் போராட்டத்தில் ஒருவன் இறந்துவிட்டான். இவன் வர்க்கப் போராட்டத்தில் இறந்திருந்தால் இவனுடன் வர்க்கப்போராட்டமும் இறந்திருக்காது. அந்த இடத்தில் இருந்து போராட்டத்தை நடாத்த எத்தனையோ உயிர்கள்புறப்பட்டிருக்கும் என்ற ஒரு புதுமையான புரட்சிகரமான சிந்தனையுடன் தொழிலாளர் சங்கத்தில் தனக்காக காத்திருக்கும் தோழர்களை காணச் சென்றிருப்பார் அண்ணன். அவர் போக்கே அலாதி. தான் ஒரு தீவிர புரட்சிவாதி என்று சொல்லிக் கொள்வதில் அவருக்கொரு மோகம்.

அம்மா நான் செல்வது— நாளை உன்னைவிட்டு சென்றுவிட்டது உனக்கொரு பெரிய இழப்பாக' அது இருக்காது. நீ தான் பக்குவப்பட்ட ஒரு துறவி போல் சலனமற்று உறவு பாசமெல்லாம் இழந்தவளாகிவிட்டாயே. ஆனால் எனக்கென்று ஒரு இதயம் இருக்கும் வரை; அது துடிப்பை இழக்கும் வரை உன்னை விட்டு செல்வதை ஒரு மாபெரும் இழப்பென்று கொள்ளாமல் இருக்க முடியுமா? அம்மா நான் கண்ணீரையும் கண்டிருக்கிறேன்; புன்னகையையும் கண்டிருக்கிறேன். ஆனால் இன்று தான் சிந்தும் கண்ணீருடன் பொங்கும் புன்னகையையும்

---



நண்பர்: உங்கள் மகன் இப்படி வேலை தேடாமல் ஊர்சுற்றுகிறானே அவனுடைய எதிர்காலம் எப்படியாகும் இப்போ எங்கே அவன்?

மற்றவர்: 'எதிர்காலம்' பார்க்க ரெண்டுமணிக் காட்சிக்குப் போய்விட்டான்.

ச. ரா. பா. சர்மா
கிருண்பாஸ்.

காண்கிறேன். அந்த மழலைப் பருவத்தின் படிகளிலே உனது அன்புள்ளத்தின் பிடிகளிலே நான் நின்ற அந்த வசந்தகாலங்களை ஏனோ இன்று என் மனத்திரையில் காணும் பாக்கியத்தைப் பெறுகின்றேன். சிறகென்று





ஒன்று எனக்கு முளைத்ததும் நான் உன்னைவிட்டு வெகுதூரம் பறந்து சென்றேன். உயர உயரப் பறந்தாலும் கூட உணவுக்காக தரைக்கு வரும் பறவைப்போல பல காததூரம் பறந்து சென்றாலும் கூட உன்னிடம் வராமல்

என்னால் இருக்க முடியவில்லை. திரும்பி வந்தேன். பறந்து வந்த என்னை நிற்கவைத்து விட்டு நீ பறந்து சென்றாயே அப்பப்பா...! என்னே வேகம்! உயரவே பறந்து பறக்கப்பட்ட பறவை உணவிற்காக பறப்பதை விடுத்து கீழே

இறங்குவதைவிட பட்டினியால் சாவதே மேல் என்ற மனோபாவத்துடன் பறந்தாயே... என்னே வேகம். என்னே வேகம் அதை விட நீ என்னை கொன்றே போட்டிருக்கலாம்.

நான் மனோகரன். என் அண்ணன் வசீகரன் அம்மா எத்தனை அழகான பெயரை எங்களுக்கு வைத்திருக்கிறாய் பெயரில் மட்டும்தானா அழகு... நாங்கள் கூட உருவத்தில் அழகர்கள்தான். அழகான எங்களுக்கு அழகான பெயரை வைத்தாலும் கூட ஏனம்மா எங்கள் வாழ்க்கை அழகற்றதாகி விட்டது. இந்த மனோகரனை விட அண்ணன் வசீகரன் மேல்தான் உனக்கு அன்பு அதிகம். நம்பிக்கை அதிகம், அதிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது. செடி தந்த முதல் மலரை போல காதலி அளித்த முதல் முத்தத்தைப்போல நீ பெற்றெடுத்த முதல் மகனுக்கு அன்பை சிந்தி சிந்தி அணைத்தணைத்து கொஞ்சி குதூகலத்துடன் வளர்த்தால் அதிலென்னம்மா தவறு இருக்க முடியும்? வசீகரனுக்கு அடுத்தபடி இந்த மனோகருக்கு உன் அன்பில் இடம் கிடைத்ததை ஒரு பெரும் பாக்கியம் என்று தானம்மா சொல்வேன்.

வாழ்க்கைதான் எத்தனை வேகமாக ஓடுகின்றது மழலை பருவத்தின் அடிசுவடுகள் அழிய அரும்பு மீசையுடன் நாங்கள் நிற்க உன் பெருமைதான் எத்தனை அளப்பரியதாக இருந்தது. அம்மா, நான் மணந்தேடி, தொழில் தேடி என்னென்னவோ இலட்சிய கனவுகளையெல்லாம் தேடி போய்க் கொண்டேயிருந்தேன். உன்னைவிட்டு வெகு தூரம் போய்க்கொண்டேயிருந்தேன். வசீகரன் உன் அருகில் இருக்கும் வரை நீ தனியாகி விடப்போவதில்லை என்ற தாளாத நம்பிக்கையுடன் உன்னை விட்டு வெகு தூரம் சென்று விட்டேன். அம்மா உன்னை விட்டு வெகுதூரம் நான் சென்று விட்

---

ஒருத்தி: நீங்கள் நல்ல அயலவர்கள்... உங்க மனைவி தங்கமானவள்.

ஒருவர்: ஓ... உங்களை அவள் ஆசை நித்திரையிலேதான் திட்டுவாள்.

—செல்வி. மல்லிகா

---

டாலும் கூட உன் அன்பை மானசீகமாக நான் பெற்றுக் கொண்டுதானிருந்தேன். இருந்தாலும் அம்மா; கருத்தில் பரிபூரணமாக வியாபித்து விட்ட உன்னை கண்களால் காணமுடியாத தூரத்துக்கு வந்து விட்டதை யெண்ணி கண்ணீர் விடத்தானம்மா என்னுல் முடிந்தது. உன்னை வந்து காணவேண்டும் என்று நான் துடித்த அந்தக் கணங்களிலெல்லாம் எனது 'வெறுங்கை' அந்த துடிப்பை நசுக்கி கொன்றுவிடும்.

இத்தகைய நாட்களின் காலங்களிலே தான் ஒரு நாள் அவளைக் கண்டேன். தரிசிக்க வேண்டியது மட்டுமல்ல ஐக்கியமாகி விடக்கூடியதுமான ஒரு ஆத்மாவை அவளுள் கண்டேன். புனிதம், தெய்வீகம் என்றெல்லாம் சொல்வதன் பொருள் அவளாக கண்டேன். அம்மா, அவளை நீ கண்டிருந்தால் நிராகரித்திருக்கவே மாட்டாய். உன் இதயத்தை ஈர்த்து அப்படியே ஆக்கிரமித்திருக்கக்கூடிய உயர்வு அவளிடம் இருந்தது. நல்ல இதயங்களினுல் தானம்மா நல்ல இதயங்கள் பெறமுடியுமாம். இந்த ரீதியில் அவளை நீயும் உன்னை அவளும் பெற்றிருந்தால் அதில் ஆச்சரியப்பட எதுவுமே இருந்திருக்காது; இல்லையா அம்மா!

அந்த தெய்வ மலரை நான் ஒரு தவமாகவேள்விழியாகநித்தியசத்தியமாக பூஜித்தது என்றுல் ஒரு உயர்வை கொடுத்ததை மறுக்க முடியாதம்மா அம்மா எனக்கென்று ஒரு வாழ்வு ஒரு வனப்பு ஒரு வசந்தம், இருக்குமேயென்றுல் அது அவளின் சங்கமத்தில் தானம்மா இருந்திருக்க முடியும்.

நாட்கள் ஓடிய ஓட்டம் மிகவும் வேகமானதாக இருந்தது. அவளின் உறவினுல் உயர்ந்திருந்த என் இதயத்தின் அளவு என் பொருளாதாரத்தின் அளவோ, வாழ்வின் நிலையோ உயர்ந்திருக்க வில்லை. இருந்தாலும் என்னம்மா, பணத்தை வீசி பெறமுடியாததை நான் இதயத்தை மட்டுமே வீசி பெற்றுவிட்டது பெருமை அல்லவா அம்மா! இதயம் நிறைந்து வழியும் வசந்த நினைவுகளை சுமந்து கொண்டு உனது அனுமதியையும் ஆசிர்வாதத்தையும் பெற ஓடோடி வந்தேன்.

அம்மா, நீயா இது? உன்னைக் காணநேரிட்ட அந்த குரூரம் நிறைந்த வினுடிகளில் என் இதயம் சுக்கு நூறுக வெடித்து சிதறுப்படாமல் இருந்தது ஆச்சரியம்தான். அம்மா, உன் பொங்கிவரும் புன்னகை எங்கே? புனிதநீறு பூசிய நெற்றி எங்கே? கொஞ்சி குலவி அணைத்த கரங்கள் எங்கே? எங்கே அம்மா; எங்கே? உன்னை விட்டு எங்கேயம்மா இவையெல்லாம் சென்றன? முக்கால்வாசி எரிந்த வீணையாக, மூலையிலே ஒடுங்கிவிட்ட சருகாக, மூண்டுவிட்ட நெருப்பில் வீசியெறியப்பட்ட தாமரை மலராக... ஐயோ அம்மா, உனக்கென்னம்மா நேரிட்டது? சரியான பார்வை அற்றவளாக, இருமியபடியே, தள்ளாடித் தள்ளாடி என்னருகே நீ வந்த போது கூட என் இதயம் எப்படியம்மா வெடிக்காமல் போயிற்று?

அந்த அழுக்கோடு கூடிய அலங்கோலமான கட்டிலில் நீ அமர்ந்திருக்கையில் உன் கால்களை அணைத்தபடியே நானிருக்க- ஒளிமங்கிய உனது கண்களிலில் இருந்து வழிந்தோடிய நீரை துடைத்து அழிக்க முடியாதவளாக இருமி இருமி நீ கூறிய கதையை, இல்லையம்மா உனது உடைந்து நொருங்கிய இதயத்தின் ஓசையை இன்றும் மறக்க முடியாதவனுக நானிருக்கிறேன். அம்மா உன் அணைப்பை விட ஒரு உலகத்தையே அறியாத வசீகரனுல் எப்படியம்மா அதனை உத



சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



சோல் ஏஜண்ட்
த. தம்பித்துரை அன் சன்ஸ்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

றித்தள்ளி விட்டுப்போக முடிந்தது? புரட்சிகர தத்துவங்களையெல்லாம் தாறுமாருக கதைக்கும் அவனுல் எப்படியம்மா ஒரு தாயின் இதயத்தை நிராகரிக்க முடிந்தது? அவன் வாழ்க்கையில் குறுக்கிட்ட அந்த பெண்ணை பற்றி நினைக்கையில் இதயத்தின் கசப்பையெல்லாம் ஒரு முறை காறி உமிழ்வதன் மூலம் அகற்றி விட முடியாதவனுக நினைவு கூர்கின்றேன். 'ஒருவனின் வாழ்வு காதல் என்ற அத்திவாரத்தில் மாத்திரம் அமைக்கப்படவில்லை' என்று அடிக்கடி கூறும் அந்த வசீகரன் உன்னை தனிமரமாக நிற்க வைத்துவிட்டு ஒட்டிக் கொண்டிருந்த ஒரு சில உறவுகளையும் தட்டி உதறிவிட்டு அவளே உலகமென்று சென்றுவிட்டான்! என்னம்மா இது? 'வேதனைகள் நிறைந்த இந்த உலகில் புரியவேண்டிய சாதனைகள் ஆயிரமாயிரமாக இருக்க, காதல்ஒருகேடா, என்று அழகாக ஆழமாககூறும்வசீகரன்ஒருபெண்ணின் பிடிகளில் தன்னையே இழந்து விட்டான். அவன் வாழ்வையும் சிந்தனைகளையும் ஆக்கிரமித்த அந்த பெண்ணினுல் உன் இதயத்தை ஆக்கிரமித்து கொள்ள முடியாமல் போனது ஏனம்மா? அம்மா வானத்தை போன்று விசாலம் நிறைந்த உன் இதயத்தில் அந்த பெண்ணுக்கு இடமில்லாமல் போனதிலிருந்தே அவளின் தரத்தை என்னுல் உணர முடிகின்றது. போகட்டும் அம்மா அவன் கோபுரத்தில் நின்று அறிஞனைப் போலப் பேசி உன்னை உதறிவிட்டு சென்ருலும் அவன் இதயம் குப்பையில் தானம்மா கிடக்கிறது. உன் கண்ணீரை துடைத்துக் கொள் அம்மா, கவலைகளை மறந்து விடம்மா உன் அருகில் நானிருக்கிறேன்; உனக்காக நான் வாழ்கிறேனம்மா!

எனக்கொரு இதயம், அதில் பொங்கி வழிந்த காதல் நினைவுகள், அந்த நினைவுகளின் சிருஷ்டிகர்தாவான அவள்... ஐயோ வேண்டாம் இவைகளெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம் நானும் ஒரு தீவிர சிந்தனையுடன் இவைகளை பெறுவதென்ருல் வசீகரனைப் போலவே உன் கடலலை போன்று அடுத்தடுத்து ஓடிவரும் பாச உணர்வுகளை அரை நொடியில் அடித்து நொருக்கி விட்டு பஞ்சணை நிறைந்த மஞ்சணையில் நெஞ்சினை நிறைக்கும் ஒரு உல்லாச புரியை உருவாக்கியிருக்கலாம். ஆனுலும் அம்மா ஒரு பெண்ணின் அரவணைப்பில் பரிணமிக்கும் சுகத்தை உணவு அணு அணுவாக கொள்வதன் மூலம் தான் பெறமுடியுமென்ருல் அந்த திக்கே அந்த திசையே என் கண்களுக்குத் தெரியவேண்டாம், உனக்காக நான் வாழ்கிறேனம்மா, உன்னிடம் பரிபூரணமாக நான் செலுத்தும் அந்த தூய அன்பில் வேரோடு ஆத்மா பங்குபோட்டு விட முடியாதபடி என் உணர்வுகளுக்கு அணை போட்டு விட்டு முழுமையாக உனக்கே அளிக்கிறேனம்மா. உனக்காக உன்னைத் தவிற மற்ற எல்லாவற்றையுமே இழக்கிறேனம்மா. காலம் ஓட்டமாய் ஓடுகிறது!

காதலி: என்னைக் கண்டவுடன் காதல் ஏற்பட்டதா?

காதலன்: கண்டவுடனென்ன கேள்விப்பட்டவுடன்...... உம்முடைய சீதனத்தைக் கேள்விப் பட்டவுடன்.

ஓ... உன்னுல் என்னை புரிந்து கொள்ள முடியவில்லை. நீ ஒரு வசீகரனுல் ஒதுக்கப்பட்டதால் ஏனே ஒதுங்கியே விட்டாய்; ஒடுங்கியே விட்டாய்! அவன் உன்னை வெறுத்து ஒதுக்கி தனியாக்கி விட்டதனுல் நீயும் இந்த உலகத்தை வெறுத்து ஒதுக்கி தனியாகி விட்டாய். அம்மா உன்னை குறை சொல்ல முடியாது, இந்த உலகத்தையே ஒரு கசப்புக் கேணியாக நினைக்கும் உன்னை இந்த நிலைக்கு கொண்டு வருவதென்ருல் அவள் உன் இதயத்தில் எவ்வளவு பலமாக அறைந்திருக்கவேண்டும்! இருந்தாலும் அம்மா நீ சற்று நிதானித்துப்பார். என் கரங்கள் உன் இதயத்தை அறையும் அளவு வலு பெற்றதல்ல அதனுல் அணைக்க மட்டுமே இயலும்; இதை உணராமல், எதையுமே உணர்ந்து கொள்ள விரும்பாமல் ஏனம்மா இத்தனை வேகமாக என்னைவிட்டு ஓடுகின்ருய் நான் என்ன பாவம் செய்தேன்? ஏனம்மா இத்தனை ஆக்ரோஷமாக என்னை தண்டிக்கிருய். 'ஆயிரம் குற்றவாளிகள் விடுதலையாகலாம் ஆனுல் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது' என்று நீ அடிக்கடி கூறுவாயே அம்மா, குற்றவாளி விடுதலையாகி விட்டான் அது சரி ஆனுல் நிரபராதி தண்டிக்கப் படுகிருனே அது ஏனம்மா? எதற்காக அம்மா? என்னை புரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்ள விரும்பாமல் ஏனம்மா இத்தனை வேகமாக ஒதுங்குகிருய் சொல் அம்மா; சொல்! நீ பேசமாட்டாயம்மா— உன்னுல்பேசமுடியாதுஉன்உணர்வுகளை மலிவாக எடைபோட்டு அவற்றை ஊனமாக்கியதன் மூலம் தான் உன்னையே அவன் ஊனமாக்கி விட்டானே. இனி எப்படி நீ பேசுவாய்—ஏன் நீ பேசுவாய்!

அம்மா, சொல்லவேண்டியவைகளையெல்லாம் சொல்லி விட்டு, சொல்லப்பட வேண்டியவைகளெல்லாம் இதயத்தில் நிரம்பி வழிய சொல்லத்தெரியாதவனுக மௌன கோலமாக நான் நிற்க. சொல்லி பிடிகளுக்குள் அகப்பட்டு விட முடியாத இதய உணர்வுகளை புரிந்தவளாக அவள் நோக்க... அம்மா அந்த காட்சியை நீ கண்டிருந்தால் உன் இதயமே உருகி

\+ \+ \+

பரிசோதகர்: ஐந்தும் மூன்றும் எத்தனை...

மாணவன்: ஏழு சார்...

பரிசோதகர்; இல்லை... எட்டு...

மாணவன்; கிட்டத்தட்ட நான் சரிதான்... என்ன சார்!

\+ \+ \+

நெகிழ்ந்து கொட்டியிருக்கும். நிச்சயம் நிறைந்த அந்த பொழுதுகளிலே—நிர்மலமான அந்தக் கணங்களிலே வார்த்தைகளுக்கு மிக மிக அப்பால் நின்று கொண்டு இதயங்கள் ஒன்றையொன்று ஊடுருவி புரியும் நிலையிலே காதலின் அந்த வேள்விக்கு கண்ணீர் ஒன்றையே காணிக்கையாக்கி விட்டு அவளை பிரிந்தேனே! அது ஏனம்மா? கனவாக, காதலாக, கற்பாக இருந்த ஒன்றை சம்மட்டியால் அடித்து நொருக்குவது போல நொருக்கிவிட்டு வந்தேனே அது ஏனம்மா? உனக்காகத் தானம்மா உனக்காகத்தான்! ஒருவன் காதல் என்ற வார்த்தையை காரணமாகவைத்துக் கொண்டு உன்னை உதறித்தள்ளி உதாசீனப் படுத்தினாலும் கூட இன்னொருவனால் அந்த காதலையே உனக்காக உதறித்தள்ள முடியும் என்று காட்டுவதற்காகத் தானம்மா? இளமையின் எழில் மிகுந்த குரலையெல்லாம் ஒரு ஏழைத் தாயின் ஏக்கம் கொண்ட உணர்வுகளுக்காக அழித்துவிட முடியும் என்ற வைராக்கியத்தை காட்டுவதற்காகத் தானம்மா!

எல்லா நெருப்புமே தொடாமல் சுட்டுவிடும் என்ற நோக்கத்தில் எல்லாமே நெருப்பு என்றெண்ணிக்கொண்டு எதையுமே தொடாமல் ஓடுகின்றாயே அம்மா அவன் நெருப்பாக உன்னை சுட்டான் என்பதற்காக ஏனம்மா இவனையும் நெருப்பென கொள்கிறாய். ஒரு முறையாவது தொட்டு பார்த்திருந்தாயானால் இதில் வீசும் குளிர்ச்சியை நீ கண்டிருக்க முடியும் இவன் நெருப்பல்ல அம்மா, மின்மினி.

அம்மா, வாழ்வின் கசைபடிகளும் கசப்புகளும் வயோதிபமும் உன்னை வாழ்வின் எல்லைக்கே கொண்டு வந்து விட்டது இன்னும் இரண்டொரு நாளில் நீ நித்தியமாக உறங்கி விடுவாயென வைத்தியர் கையை விரிக்கிறார். அம்மா, நீ போகப் போவது உறுதி அதுவும் என்னை புரிந்து கொள்ளாமலே போகப் போவது மற்றுமொரு உறுதி அதை நான் அனுமதிக்க மாட்டேன்.

இதோ இந்த மாத்திரைகளை நான் விழுங்குகின்றேன். அம்மா உனக்கு முன்பு நான் போகிறேன். உனக்காக எங்கோ ஒரு வெளியில் ஏதோ ஒரு உருவில் நித்தியபிச்சலம் பொங்கும் அந்த பீடத்தில் காத்திருக்கிறேனம்மா. என்னருகே நீ வரும் வரையும் என் இதயத்தின் உணர்வுகளை நீ புரிந்து கொள்ளும் வரையும் உனக்காக நான் காத்திருக்கிறேனம்மா. இதோ என் கண்களில் மங்கலாக தெரியும் அந்த கோபுர உச்சிக்கு மிக மிக அப்பால் நீ ஓடோடி வரும் வரையில் உனக்காக நான் காத்திருக்கிறேனம்மா! உன்னைக் காண எத்தனை யுகங்கள் வேண்டுமோ அத்தனை யுகங்களையுமே கடந்து உனக்காக காத்திருக்கிறேனம்மா! அம்மா...அம்மா...

---

# பள்ளிப் பகிடி

## பள்ளிப் பழமொழிகள்

சிறிய மாணவன் ஆனாலும் பெரிய பிரம்பு கொண்டு அடி.

அதிபர் வரங்கொடுத்தாலும் வகுப்பாசிரியர் வரங்கொடார்.

ஆசிரியர் பேசி மாணவன் திருந்துவானா?

கல்லூரி வெண்கட்டிஎடுத்து தெரு வீதியிலே எழுதாதே.

பிஸ்கட் வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே.

படிப்பவர்கள் எல்லாம் அறிவாளிகள் அல்ல.

படிப்பிக்கத் தெரியாத ஆசிரியர் புத்தகம் சரியில்லை என்றாராம்.

அன்பான நண்பனை பரீட்சை நேரத்தில் அறிவாய்.

அறிவுள்ள மாணவரை ஆசிரியரும் விரும்புவார்.

பரீட்சையில் கேள்வி ஒன்றைக் கேட்க விடை ஒன்றை எழுதலாமா?

பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது.

மாணவர்களுக்கு படிக்க நேரமும் இல்லை, படித்துவிட்டால் வேலையும் இல்லை.

சலாகிதீன்
வெள்ளமனல்.

## நண்டு நன்று நன்றன்று

நான் க. பொ. த. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். வழமைபோல் முதல் பாடத்தை அடுத்து சமய பாடம் ஆரம்பமாகியது. பாடத்திற்கான ஆசிரியர் வகுப்பிலிருந்து வந்தார். என்னுடைய சமய பாடப் புத்தகத்தைப் பெற்று 'பஞ்சமாபாதக'த்தைப் பற்றி விளக்கினார். உயிர்களைக் கொல்லுதலும் பஞ்சமாபாதகங்களில் ஒன்றாகும்! நாம் மீன், இறைச்சி, நண்டு என்று உயிர்களைக் கொன்று புலாலுண்ணுதலும் பெரும்பாவமே. இப்படிச் செய்வார்கள் மோட்சத்தை அடையார்'! என்று விளக்கிச் சென்று விட்டார். இடைவேளையை அடுத்து சுகாதாரப் பாடம் சைவ சமயபாடத்திற்கான ஆசிரியரே சுகாதாரத்திற்கும் வந்தார், ஒரு பிள்ளையிடமிருந்து புத்தகத்தைப் பெற்று பாடத்தை விளக்கினார். 'எமக்குத் தேவையான உயிர்சத்துக்

கள் மாமிசத்திலேயே அடங்கியுள்ளது. மீன், இறைச்சி, நண்டு முதலியவற்றை உண்பதால் நாம் தேகாரோக்கியம் உள்ளவராவோம்! என்றாரே பார்க்கலாம். மாணவியரெல்லோரும் சேர்ந்து 'இது என்ன டீச்சர்... காலையில் மாமிசம் உண்பது பாபமென்டீங்க, இப்போ இப்படிச் சொல்றீங்களே நாங்க எதன்படி நடக்கிறது'! எங்களுடைய கலாட்டாவுக்கிடையில் காதைப் பொத்திக்கொண்டு அறையை விட்டு வெளியேறினார் டீச்சர்.

செல்வி. எம். இந்திரா

கொழும்பு-12.

## விதியின் விளையாடல்

எங்கள் வகுப்பு மாணவர்களில் கந்தசாமி என்ற மாணவன் படிப்பில் வெறும் மண்டுவாக இருந்தாலும் 'குடியியலில்' மிகவும் சமர்த்தன் அதாவது குடியியல் என்றால் பீடி, சுருட்டு புகைப்பதற்கும் சக மாணவர்கள் இப்படி கூறுவார்கள். குடியியல் நிபுணனான கந்தசாமி எங்கள் ஊரில் நிகழ்ந்த ஒரு கோவில் திருவிழாவுக்குச் சென்றான். எப்படியோ ஒரு சுருட்டு அவனுக்கு கிடைத்து விட்டது. ஆனால் பற்ற வைப்பதற்குத் தீப்பெட்டி இல்லை. கோயில் வெளி வீதியில் உலாவிக் கொண்டிருந்த ஒருவரை அணுகி 'அண்ணே இதை ஒருக்காப் பத்திவிடு' என்று கேட்டான். அவரும் தயங்காமல் அவனின் முகத்தருகே சுருட்டைப் பற்றவைக்க தன் முகத்தைக் கிட்டக் கொண்டுவந்தார். பற்றவைக்கும் போதுதான் கந்தசாமி சுருட்டுத்தணல் வெளிச்சத்தில் அவர் முகத்தைப் பார்த்துப் பேயறைந்தவன்போல் இருந்தான். அவரும் வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தார் அவர் வேறு யாருமல்ல. எட்டாம் வகுப்பு மாணவனான கந்தசாமியின் வகுப்பாசிரியர்தான்.

மறு நாள் பாடசாலைக்கு மட்டம் போடுவதற்கு வசதியில்லாமல் போகவே வருவது வரட்டும் என்ற அசட்டுத் துணிவுடன் கந்தசாமி பாடசாலைக்குச் சென்றான். வகுப்பு ஆரம்பமாகியதும் வகுப்பாசிரியர் ஒரு கட்டுச் சுருட்டைத் தனது மேசை மீது வைத்துவிட்டு தீப்பெட்டியையும் எடுத்து வைத்தார். கந்தசாமிக்குப் பொறி கலங்கிப் போயிற்று. ஆசிரியர் மாணவர்கள் எல்லோரையும் ஒரு முறை பார்த்தார் அவர்பார்வை கந்தசாமியின் பக்கமே சென்றதும் அவன் கண்கள் நிலத்தை நோக்கின. பின்பு ஆசிரியர் எல்லா மாணவர்களையும் நோக்கி 'மாணவர்களே! சுருட்டுப் புகைக்க விரும்பியவர்கள் இங்கே மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் சுருட்டுக்களை எடுத்துப் புகைக்கலாம்' என்று கூறினார். வகுப்பில் கந்தசாமியை தவிர ஏனையோர் அனைவரும் திகைத்துப்போய் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். வகுப்பில் அமைதி நிலவவே ஆசிரியர் முதல் நாள் கோயில் வீதியில் நிகழ்ந்த சம்பவத்தைக் கூறியதும் வகுப்பு சிரிப்பொலியில் மிதந்தது.

(சம்பவம் உண்மை. பெயர்கள் மட்டும் கற்பனை)

செல்வி. வே. ராஜலட்சுமி

கொடிகாமம்.

## சிவ சிவா சிவராசா!

நான் அப்போது கா. பொ. த வகுப்புப் படித்துக்கொண்டிருந்த காலம். நாங்கள் படித்த பகுதி விஞ்ஞானப் பகுதி எங்களுக்கு உயிரியலும் ஒரு பாடமாகும் உயிரியல் கற்பிக்கும் ஆசிரியரோ மிகவும் கண்டிப்பானவர் அன்று எங்களுக்கு மரம் செடிகளின் வளர்ச்சியைப் பற்றி மிகவும் விரிவாகப் போதித்தார் எல்லோரும் அவர் சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தோம் ஆனால் எனது முன் வரிசையிலுள்ள சிவராசா என்னும் மாணவனோ உயிரியல் புஸ்தகத்தினுள் சினிமாப் புஸ்தகம் வைத்து வாசித்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் படிப்பித்து முடிந்ததும் நாளை உங்களிடம் இன்றைய பாடத்தைப் பற்றிக் கேள்வி கேட்பேன் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். அடுத்த நாளும் வந்தது. எமது உயிரியல் ஆசிரியர் வகுப்பிற்கு வந்ததும் ஒரு விஞ்ஞானம் பயிலும் மாணவனின் வீட்டிலுள்ள மரம் ஒன்று வளருகின்றது என்பதை அந்த மாணவனுக்கு என்ன உயிரியல் பரிசோதனை மூலம் செய்து காட்டலாம் என்ற கேள்வியைக் கேட்டார். நாம் எல்லோரும் யோசித்துக் கொண்டிருந்தோம். அப்போது சிவராசா எழுந்து அந்த மாணவனை மூன்று நான்கு மாதம் வெளியூருக்குக் கூட்டிச் சென்று விட்டுப் பின்பு கூட்டிவந்து காட்டினால் மரம் வளர்ந்திருக்கிறது என்று கூறுவான் என்றான். மிகவும் கண்டிப்பான ஆசிரியரே சிவ சிவா சிவராசா என்று கொல் என்று சிரித்தார் நாங்கள் பார்த்துக் கொண்டும் கொல்லென சிரிக்காமலா இருந்திருப்போம்.

ச. நா. குகதாஸ்

வட்டுக்கோட்டை.

## நகர்ந்த தலை நகரம்

நான் 7-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம், எங்கள் வகுப்பிற்கு ஓர் புதிய மாணவன் வந்திருந்தான். தகப்பனுக்கு வேலைமாற்றம் கிடைத்ததால் யாழ்ப்பாணத்திற்கு வந்து, எமது கல்லூரியிலே சேர்ந்தான்.

அன்றொருநாள் பூமிசாத்திர பாடம் நடந்துகொண்டிருந்தது. அன்றைய தினம் புவியியல் ஆசிரியர் அம்மாணவனைப் பார்த்து பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு கேள்விக்கும் அவனுக்குப் பதில் தெரியவில்லை இறுதியில், ஆசிரியர் இலங்கையின் தலைப்பட்டினம் யாது?' எனக்கேட்டார். அதற்கு அந்த மாணாக்கன் 'காங்கேசன்துறை' என பட்டெனப் பதிலுரைத்தான் அவனதுபதிலைக்கேட்டுஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

பின்பு அம் மாணவனைப் பார்த்து எப்படி அறிந்து கொண்டாய்?' என்று கேட்டார். அதற்கு அவன் 'இலங்கைப் படத்தின் தலையில் உள்ள பட்டினம் காங்கேசன்துறைதானே!' என மறுமொழி கொடுத்தான். மீண்டும் வகுப்பறையில் சிரிப்பொலி எழுந்து அடங்கியது.

# சித்திரமும் சிறுகதையும்

கடந்த இரண்டு மூன்று வெளியீடுகளில் ‘சித்திரமும் சிறுகதையும்’ பகுதி தவிர்க்கப்பட்டதையிட்டு வாசகர்களிடமிருந்து மன்னிப்புக் கோருகிறோம் இதோ சிறுகதைக்குரிய சித்திரமும் விளக்கமும்:-



‘‘சோமு சம்சாரியாகிவிட்டான்’’

எல்லாருக்கும் தெரிந்த விஷயம் இதுதான். எழுத்தாளர்களுகு சோமுவின் வாழ்க்கையைப் பற்றியே தெரிந்திருக்கும் சிறுகதை வடிவில் அதை எழுதுங்கள் பரிசு ரூபா பதினைந்து முகவரி கீழுண்டு. கதைகள் எமக்கு ஆகஸ்ட் 15ந்திகதிக்கு முன்னர் கிடைக்கவேண்டும்.

‘‘சித்திரமும் சிறுகதையும்’’

சிரித்திரன்

---

ஒருவர்: நீ சங்கீதம் தெரிந்த பெண்ணைக் கல்யாணம் பண்ணினதாகக் கேள்விப்பட்டன்.

மற்றவர்: ஓ... வீட்டிலை ஒரே சரி கம கமதான்... கறி கம கமவில்லை!

---

ஒருவர்: இந்தியாவில் தமிழர் கண்ணகிக்குச் சிலை எழுப்பினுங்க இலங்கையில் எந்தப் பெண்ணுக்கு சிலை எழுப்புறது.

மற்றவர்: தமிழ்ப்படம் பாரத பெண்ணுக்கு.

—ஜோகிராட்டீஸ்

---

ஒருவர்: எப்பிடிக் கலைஞரே உன்னை நண்பர்கள் வாழ வைக்கிறார்களா?

கலைஞன்: ஓ... குடிக்க உதவி செய்கிறார்கள்... குடித்தனம் நடாத்த உதவி செய்கிறார்களில்லை.

---

ஒருவர்: என்னுடைய மகனுக்கு மூளைக் கோளாறு போல... ஒரு உத்தியோகத்திலை நிலையா நிக்கிறானில்லை. ஆடு மாதிரி அத்திலை ஒரு கடி இத்திலை ஒரு கடி.

மனநோய் டாக்டர்: ஆட்டுக் கறி கூடச் சாப்பிடுகிறார் போல.

உங்கள் இல்லத்தில் இன்சுவை பொங்க இன்றே உபயோகியுங்கள்

**999** பாயசப் பவுடர்
*விலை. 2-00*

**999** சாம்பார் பவுடர்
*விலை. 1/30*

**"ஓயசிஸ்"** குளிர்பானப் பவுடர்
இனிப்பூட்டப்பட்டது ரூ. 1/50
இனிப்பூட்டப்படாதது ரூ. 2/50

இவைகள் யாவும் இன்கோ INCO தயாரிப்புகள்.




ஏக விநியோகஸ்தர்கள்:

**ட்ரேட்ஸ் அண்ட் எண்டர்பிரைசஸ்,**

140, சென் செபஸ்தியன் வீதி, கொழும்பு-12.

**கலிங்கா இண்டஸ்ட்ரீஸ்,**

21, மெயின் வீதி, மட்டக்களப்பு.


பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது. பதிவு இலக்கம்:கியூ பீ—934





நூலாராய்ச்சி மாநாட்டில் டாம் மார்க் நூலே சிறந்ததெனத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்.

எழில் மிகு வர்ணங்களில்
"டேம் மார்க்"
எம்புரோய்டரி
தையல் நூல்களை
எங்கும்
பெற்றுக்கொள்ளலாம்.




தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங்
கம்பெனி,

கொழும்பு-12,


101/4 சென் பெனடிக்ஸ் வீதி, கொழும்பு-13ல் உள்ள சி. சிவ ஞானசுந்தரம் அவர்களால் 194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அட்டை, இல 27 பீர்சாய்பு வீதி. கொழும்பு-12ல் உள்ள எம்.ஜி.எம் பிரிண்டிங் இன்டஸ்ரீஸில் அச்சிடப்பட்டது.